Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 24 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


கதிர் :227 ஆனி 29ஆம் நாள் திங்கட்கிழமை 13 ஜூலை 2020 வள்ளுவர் ஆண்டு 2051



## கொரோனா அச்சத்திலும்

# தபால்மூல வாக்களிப்பு இன்று ஆரம்பமாகிறது

### வடக்கில் 9 இடங்களில் வாக்களிப்புக்கு ஏற்பாடு



யாழ்ப்பாணம், ஜூலை 13

கொரோனா இரண்டாவது அலை அச்சத்துக்கு மத்தியிலும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. வடக்கில் இன்று 9 இடங்களில் தபால் மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளது. வாக்களிப்பு நிலையங்களாகச் செயற்படவுள்ள இடங்களில் உரிய சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படுவதனை உறுதி செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 23 ➤

## விஷவாயு தாக்கி இளைஞன் சாவு

வவுனியா, ஜூலை 13

வவுனியா, சேமமடுப் பகுதியில் விஷ வாயு தாக்கி இளைஞன் உயிரிழந்துள்ளான். இந்தச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது. எஸ். ரஞ்சிதகுமார் (வயது-28) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார். 23 ➤

## விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

வவுனியா, ஜூலை 13

வவுனியா, கண்டி வீதியில் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். 23 ➤

## இழுத்து மூடப்படுகின்றன பாடசாலைகள்

கொழும்பு, ஜூலை 13

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் இன்று தொடக்கம் எதிர்வரும் 17ஆம் திகதி வரை மூடப்படுவதாக கல்வி 22 ➤



## நிலைமையை பொறுத்தே தேர்தல்

கொழும்பு, ஜூலை 13

கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்தால் ஓகஸ்ட் 5ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுமா? இல் 23 ➤

## ராஜாங்கனை பகுதிக்கான வாக்களிப்பு இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 13

பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்று முதல் ஆரம்பமாகவுள்ள நிலையில் அநுராதபுரம் ராஜாங்கனை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிக்கான வாக்க 23 ➤

## உரும்பிராய் சந்தியில் விபத்து: பெண் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாணம், மானிப்பாய்-கைதடி வீதியில் உரும்பிராய் சந்திக்கு அண்மையில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் சிக்கி இளம் குடும்பப் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்து 23 ➤

## வடக்கில் 9 பேர் தனிமைப்படுத்தல் மையத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 13

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்துக்குச் சென்று வந்த 23 ➤

தேர்தல் விதி மீறல்

## பல்கலை மாணவர் உட்பட 5 பேர் கைது!

முல்லைத்தீவு, ஜூலை 13

முல்லைத்தீவு நகரப் பகுதியில் கட்சிச் சின்னத்துடன், வீதியில் ஸ்பிறே செய்யும் உபக 23 ➤

## தேர்தலை உடன் பிற்போட வேண்டும்

### ரணில் யோசனை

கொழும்பு, ஜூலை 13

தேர்தலை ஒத்தி வைப்பதாக இருந்தால் இறுதி நேரம் வரை காத்திருக்காமல், தேர்தல் ஆணைக் குழுவுடன் பேச்சுநடத்தி உடனடியாக அரசு முடிவொன்றை 22 ➤

## கொரோனா அடுத்த சுற்று வடக்கைத் தாக்கக்கூடும்

### எச்சரிக்கிறார் மருத்துவர் யமுனானந்தா

யாழ்ப்பாணம், ஜூலை 13

கொரோனா தொற்றின் இரண்டாம் சுற்றின் முதலாவது படி மீண்டும் ஆரம்பித்துள்ள நிலையில், வடக்கு மாகாணத்திலும் அதன் தாக்கம் ஏற்படும் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் எஸ். யமுனானந்தா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் கொரோனாவின் இரண்டாம் அலை பரவக் 22 ➤

## வாள்வெட்டு குழுவுக்கு என்.ஐ.ரி. குழு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாணத்தில் சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடும் வாள்வெட்டு குழுவுக்கு எச்சரிக்கை விடுத்தும், அவர்கள் எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் எனவும், தொடர்ந்தும் இவ்வா 23 ➤

## கீரிமலையில் வெடிவிபத்து 3 பேர் காயம் 4 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 13

இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கீரிமலை கேவில் பகுதியில் ஒரு வகை வெடி பொருளை 23 ➤

## பம்பைமடுவில் இருவருக்கு கொரோனா

வவுனியா, ஜூலை 13

வவுனியா பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாமில் இருவருக்கு கொரோனா 22 ➤

## வவுனியாவில் சிப்பாய்க்கு கொரோனா தொற்று

வவுனியா, ஜூலை 13

கந்தக்காடு இராணுவ முகாமில் பணியாற்றும் வவுனியா மடுக்கந்தைப் பகுதியில் வசித்து வரும் இராணுவச் சிப்பாய்க்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து அவரது குடும்பத்தினர் தனிமைப்படுத் 23 ➤



## டிப்பர் – ஹையேஸ் விபத்து
## 3 வயதுச் சிறுமி உட்பட நான்கு பெண்கள் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 13
யாழ்ப்பாணத்தில் விபத்துச் சம்பவம் ஒன்றில் சிக்கி, 3 வயதுச் சிறுமி உட்பட நான்கு பெண்கள் காயமடைந்துள்ளனர்.
யாழ்ப்பாணம், வடலியடைப்பு அரசடிச் சந்தியில் நேற்று இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. டிப்பரும் ஹையேஸ் வானும் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது. வடலியடைப்பு நல்லுண்ணி வீதியால் வந்து அரசடி சந்தியில் ஏறமுற்பட்ட ஹையேஸ் வானும் பிரதான வீதியால் பயணித்த டிப்பர் வாகன முமே விபத்துக்குள்ளானது. விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை இளவாலைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ப)

### மரண அறிவித்தல்

மலர்வு 05 . 05 . 1950



உதிர்வு 11 . 07 . 2020


### வைத்திலிங்கம் செல்லமுத்து

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் இல.69, சிவநகர் உருத்திரபுரத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் செல்லமுத்து 11.07.2020 சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், திருநாவுக்கரசு காலஞ்சென்ற பறுவதம் மற்றும் பொன்னம்மா (கனடா), வள்ளிப்பிள்ளை (கனடா), காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் இலட்சுமணன் ( முன்னாள் கிளை முகாமையாளர் கரைச்சி (MPCS), சுந்தரராசா (ஓய்வுபெற்ற கிராம அலுவலர் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நடராசா, காலஞ்சென்ற ஆனந்தமூர்த்தி மற்றும் சாந்தலிங்கம், ஞானசக்தி காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, நடேசன், நடேஸ்வரி, பாக்கியம், தவமணி மற்றும் தனலட்சுமி, தியாகராசா (France) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், உமாசங்கர், சாந்தரூபி (கனடா ) ஆகியோரின் பாசமிகு சிறிய தாயும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2020) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உருத்திரபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: நா. திருநாவுக்கரசு (ராசு), நா.இலட்சுமணன், நா. சுந்தரராசா – சகோதரர்கள்
ஆ.சிவனேசன், - பெறாமகன்

### மரண அறிவித்தல்

பிறப்பு 04 . 12 . 1930



இறப்பு 12 . 07 . 2020

### முருகேசு சண்முகம்

அருளானந்த பிள்ளையார் கோயிலடி, கந்தரோடையை பிறப்பிடமாகவும், கல்வளை சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சண்முகம் நேற்று ( 12.07.2020 ) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.
அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் சத்தியவதனி, பிறேமவதனி, சத்தியசீலன் காலஞ்சென்ற ஜெயவதனி, ஜெயசீலன் காலஞ்சென்ற கேமவதனி, உதயசீலன் ஆகியோரின் தந்தையும் சந்திரரட்ணம், பாஸ்கர், குமுதினி, மனோகரன், திருமகள், குகதாஸ், மேகலா ஆகியோரின் மாமனாரும் மற்றும் பேரப்பிள்ளைகளின் பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2020) திங்கட்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கன்புல இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 360 3804, +336 6162 4856 (பிரான்ஸ்)

# பழைய முறையிலாவது மாகாணசபைத் தேர்தல்

*மஹிந்த ராஜபக்ஷ உறுதி*



கொழும்பு, ஜூலை 13
பொதுத்தேர்தலின் பின்னர் அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் பழைய முறையிலாவது மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
பாதுக்க பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அன்று நாங்கள் சிறிய கலந்துரையாடலில் ஆரம்பித்த பொதுஜன பெரமுனவின் வருகை இன்று மிகப்பெரிய சக்தியாகியுள்ளது. பிரதேச சபை தேர்தலில்நான்காயிரம்பிரதிநிதிகளை நியமிக்க முடிந்தது. அன்று 71 சதவீத வாக்குகளை பெற்று தேர்தலில் வெற்றி பெற்றோம். வடக்கு கிழக்கை தவிர்த்து ஏனைய பிரதேசங்களில் நாங்கள் மிகவும் தெளிவான விசேட வெற்றியைப் பெற்றோம் என்று கூறினால் சரியாக இருக்கும். கடந்த அரசு இரண்டு வருடங்களாக மாகாண சபைத் தேர்தலை பிற்போட்டது. மாகாண சபை தேர்தலை பிற்போட்டுவிட்டு முடிந்த விடயங்களை செய்தார்கள். நாட்டில் நல்ல நேரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்த நேரிட்டது. நாங்கள் ஜனாதிபதி தேர்தலில் பெரும் வெற்றியை பெற்றோம். இந்த பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று அரசமைப்பில் மாற்றம் மேற்கொண்டு பழைய முறையிலாவது மாகாண சபைத் தேர்தலை நடத்தி மக்களின் ஜனநாயக உரிமையைக் காப்பாற்ற நாங்கள் நடவடிக்கை எடுப்போம்- என்றார். (ஒ.5)

# அமைச்சுப் பதவி கேட்பது வெட்கக்கேடானது

யாழ்ப்பாணம், ஜூலை 13
அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளுக்குப் பேரம் பேசுவதற்கு தமக்குப் போதிய அரசியல் பலம் வேண்டும் என்று சுமந்திரன் கோருவது வெட்கக்கேடானது என்று மூத்த சட்டத்தரணியும், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமுமான என். சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;
அரசியல் தீர்வு ஏற்படுவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்று சொல்லமுடியாது. போராட்ட காலமென்றால் அடித்துப்பறிக்கலாம் ஜனநாயக வழி அப்படியானதல்ல, பேசித்தான் தீர்க்க வேண்டும். அரசியல் தீர்வுக்காகக் காத்திருக்கும் இடைப்பட்ட காலத்தில் அபிவிருத்தி பற்றியும் சிந்திக்கவேண்டிய அவசியமுள்ளது. அடுத்த பொதுத் தேர்தலுக்குப்பிறகு அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக அமைச்சுப் பதவிகளைப்பெறுவது பற்றிச் சிந்திக்கவேண்டி வரலாம். அடுத்தது அமைச்சுப்பதவிகளைப்பெறுவதானால் எத்தனை அமைச்சுக்கள், எந்த அமைச்சுக்கள், அவற்றுக்குள்ளான அதிகாரங்கள் என்ன என்பது பற்றியெல்லாம் நாங்கள் பேரம் பேச வேண்டியிருக்கும். பேரம் பேசுவதற்கு அரசியல் பலம் வேண்டும். அந்தப்பலத்தை எதிர்வரும் தேர்தலில் நாங்கள் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று தம்பி சுமந்திரன் பேசியிருப்பது எமக்கு எந்த ஆச்சரியத்தையும் அளிக்கவில்லை. கடந்த சில நாள்களாக நாங்கள் வெளியிட்டு வந்த சந்தேகம் இப்பொழுது சுமந்திரனால் பகிரங்கமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி கோத்தாபய தலைமையிலான பொதுஜன பெரமுனவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையில் அரசியல் உறவு மலரத் தொடங்கியுள்ளதாக நாங்கள் சமீபகாலமாகத் தெரிவித்து வந்துள்ளோம். சுமந்திரனின் பேச்சு எமது கருத்து உண்மையானது என்பதை தெட்டத் தெளிவாக்கியிருக்கின்றது. தமிழ் மக்களின் சார்பில் ஒற்றுமையாக எங்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புங்கள் அங்கே நாங்கள் உங்களுக்காகப் போராடுவோம் என்றெல்லாம் கூறி வந்தவர்கள், தேர்தலுக்குப்பின்னர் மீண்டும் அமையப்போகின்ற ராஜபக்ஷ அரசாங்கத்தில் அமைச்சுப்பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அரசியல் பலத்தைத் தாருங்கள் என்று தயக்கம் எதுவுமின்றிக் கோருகின்ற அளவுக்கு இப்பொழுது சீரழிந்து போயிருக்கின்றார்கள்.
இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடே என்று ஜனாதிபதி கோத்தாபயவும் பிரதமர் மஹிந்தவும் இரண்டு வேவ்வேறு சந்தர்ப்பங்களில் கூறியிருந்தனர். அவர்களின் இன்றைய அரசாங்கம் சிங்கள பௌத்த பேரினவாத நிகழ்ச்சி நிரலை தினமும் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது. இந்த நிலையில் தேர்தலுக்குப்பிறகு வரும் புதிய ராஜபக்ஸ அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளுக்குப் பேரம் பேசுவதற்கு தமக்குப் போதிய அரசியல் பலம் வேண்டும் என்று கூட்டமைப்பு கோருவது வெட்கக்கேடானது. இனிமேல் தமிழ் மக்களுக்காகப் போராடுவதற்கு கூட்டமைப்பு தயாராக இல்லை. அவர்கள் சுகபோக அரசியல் நடத்தவே விரும்புகின்றனர்.
புதிய அரசமைப்புத் தொடர்பான நாடாளுமன்ற நடவடிக்கைகளின் போது ஒற்றையாட்சி முறையையும் பௌத்த மதத்துக்கான விசேட அந்தஸ்தையும் கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டது. இதன் தொடர்ச்சியாகவே இப்போது தோற்றுப்போன ரணில் விக்கிரமசிங்கவைக் கைவிட்டு ஆட்சி நடத்தும் ராஜபக்ஷவுக்குத் தனது விசுவாசத்தை மாற்றுவதற்குத் தாம் தயார் என இவர்கள் அறிவித்துள்ளனர் இது அப்பட்டமான அரசியல் விபச்சாரமாகும் - என்றுள்ளது. (ப-26)

4 X

சபையில்
## சரவணபவன்






இராணுவத் தளபதி சவேந்திர சில்வா காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்று யாருமே இல்லை. வெள்ளைக் கொடியுடன் எவருமே வரவில்லை என்கிறார். அமைச்சர் விமல் வீரவன்ச காணாமல் போனோரை மண்ணுக் குள் தான் தேட வேண்டும் என்கிறார்.

இவர்களுடைய கூற்று எம்மை மட்டுமல்ல முழு சர்வதேசத்தையும் உதாசீனம் செய் வதும் மனிதகுல மனச்சாட்டியை குழிதோண்டிப் புதைப்பதுமான ஒரு ஈனச் செயல். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு ராஜபக்ஷக்கள் மட்டுமல்ல விமல் வீரவன்சவும் பொறுப்பு. இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன். நாடாளு மன்றத்தில் உரையாற்றும்போது மேலும் கூறியதாவது:

காணாமல் ஆக்கப்பட்டோரை மண்ணுக்குள் தேட வேண்டும் என திமிர்த்தனமாகச் சொல்லியுள்ளார் விமல் வீரவன்ச.

அப்படியானால் காணாமல் ஆக்கப்பட்டோர் எங்கு புதைக்கப்பட்டனர் என்பதையும் யாரால் புதைக்கப்பட்டனர் என்பதையும் விமல் வீரவன்ச அறிந்திருப்பார். எனவே காணாமல் ஆக்கப்பட்டோருக்கு ராஜபக் ஷக்கள் மட்டுமல்ல விமல் வீரவன்சவும் பொறுப்புக்கூற வேண்டும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், காணாமல் ஆக்கப்பட்டோரை தேடித் தரும்படி கோரி நடத்தும் போராட்டம் ஆயிரம் நாள்களைத் தாண்டி மேலும் மாதங்களால் விரிவடைந்து செல்கின்றது. இப்படியான நிலையில் பொறுப்பற்றதனமாகப் பேசுவது அநாகரிகமான ஒரு செயல். விமல் வீரவன்ச கூறுவது உண்மையானால் கொலைசெய்து வலிந்து காணாமல் போனவர்களை கொலை செய்து புதைத்தவர்கள் யார் என்பது நிச்சயமாக விமல் வீரவன்சவுக்கு தெரிந்திருக்க வேண்டும். அல்லது கொன்று புதைத்தவர்களில் வீரவன்ச வும் ஒருவராக இருக்க வேண்டும்.

(2020 பெப்ரவரி)

1 2 3 4 5 6 7 8 9 10

(இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்)



## பாராளுமன்றத் தேர்தல் - 2020
## யாழ் தேர்தல் மாவட்டம்

X

**அன்புக்கும் மதிப்பிற்குமுரிய அரச உத்தியோகத்தர்களே!**

**நேர்மையும் கண்ணியமும் மிகுந்த அனுபவமும் வெளிப்படைத்தன்மையும் கொண்ட உங்கள் பிரதிநிதிகளை தெரிவுசெய்யுங்கள்.**



6

**தருமலிங்கம்**
**சித்தார்த்தன்**
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)



7

**பாலச்சந்திரன்**
**கஜதீபன்**
(முன்னாள் மாகாணசபை உறுப்பினர்)

1 2 3 4 5 6 7 8 9 10

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA)

## கண்ணீர் அஞ்சலி

### முத்தையா இராசரத்தினம்



கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் விளையாட்டுத்துறை பொறுப்பாளரும், நிர்வாகசபை உறுப்பினருமான திரு. இராசரத்தினம் பிரணவன் அவர்களின் அன்புத் தந்தையும் சமூக, சமய, அரசியல் உணர்வாளரும், எழுத்தாளரும், நாடகக் கலைஞரும் என பல்முக ஆற்றல் கொண்ட மு.இராசரத்தினம் அவர்களின் மறைவு எமக்கும், அன்னாரின் குடும்பத்தினருக்கும், சமூகத்திற்கும் பேரிழப்பாகும்.

அன்னாரின் மறைவிற்கு எமது கழகம் சார்பாக கண்ணீர் அஞ்சலியினை காணிக்கை ஆக்கிக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

சம்பியன்லேன்,
கொக்குவில்.

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகம்.
வளர்மதி நிறைவாழ்வகம்

# ஒற்றையாட்சி முறைமை இலங்கைக்கு பொருந்தாது

## அதிகாரப் பகிர்வை நாம் ஒற்றுமையாக கோர வேண்டும் என்கின்றார் சம்பந்தன்



கொழும்பு, ஜுலை 13

சர்வதேச நாடுகளில், ஒவ்வொரு மொழி பேசுகின்ற இனத்துக்கும் வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு போன்ற ஒரு தீர்வை நாம் பெற வேண்டுமென்றால் அனைவரும் ஒன்றினைந்து வாக்களித்து நாம் ஒரே கொள்கையில் இருக்கின்றோம் என்ற செய்தியை இலங்கை அரசாங்கத்துக்கும், சர்வதேச சமூகத்துக்கும் மீண்டும் உணர்த்த வேண்டும். என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நேற்றுமுன்தினம் வெருகல் பிரதேசத்தின் சூரநகர் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஒற்றையாட்சி முறையானது பல இனங்கள் இணைந்து வாழ்கின்ற நாட்டுக்கு உகந்த முறை அல்ல. இந்த முறை மாற்றி அமைக்கப்பட்டு அதிகாரங்கள் பகிர்தளிக்கப்பட்டு அந்தந்த பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் தமது இறைமையின் அடிப்படையில் தம்மைத் தாமே ஆளுகின்ற சட்ட திட்டங்கள் அமைய வேண்டும். தமிழ் மக்கள் அநீதியாக ஒன்றும் கேட்கவில்லை ஒருமித்த நாட்டுக்குள் ஜனநாயகத்தின் அடிப்படையில் எமது தீர்வை வலியுருத்தி வருகின்றோம். நாங்கள் நாட்டைப் பிரிக்க வேண்டும் என்று கேட்கவில்லை.

அன்றும் பெரும்பான்மை இனத்தோடு ஒற்றுமையாக வாழ வேண்டும் எனறே எமது மக்கள் விரும்பினார்கள். ஆனால் எல்லா விடயங்களிலும் நாம் திட்டமிட்டு பலவீனப்படுத்தப்பட்டோம். பொலிஸ், காணி, அபிவிருத்தி, கல்வி, தொழில் வாய்ப்பு போன்ற துறைகளில் அநீதி இழைக்கப்பட்டது எனவே தான் எமது அதிகாரத்தை எமது இறைமையின் அடிப்படையில் வழங்குமாறு வலியுறுத்தி வருகின்றோம்.

சுவிஸ் நாட்டில் தேசிய பொலிஸ் படை இல்லை. அந்த நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவது அந்த நாட்டின் அதிகாரிகள். இவ்வாறான அதிகாரப்பகிர்வுகள் பல நாடுகளில் மிகச் சிறப்பாக வழங்கபட்டுள்ளது. உதாரணமாக அண்மையில் உள்ள மிகப்பெரிய நாடான இந்தியாவிலே உள்ள சகல மாநிலங்களுக்கும் மாநில சுயாட்சியும் அதிகாரப் பகிரவும் வழங்கப்ட்டுள்ளது. வெவ்வோறு மொழி வெவ்வேறு கலாசாரம் உள்ளவர்கள் தங்களைத் தாங்கள் ஆளுகின்ற அதிகார அலகு கிடைக்கப்பெற்றுள்ளது. இதைத்தான் எமது தமிழ் மக்களும் கோருகின்றனர். இவற்றை நாம் பெற வேண்டுமானால் நாம் தொடர்ந்து இந்தக் கோரிக்கையை வலியுறுத்த வேண்டும். எம்மில் எந்த ஒரு தளர்வும் இல்லை என்பதை இலங்கை அரசுக்கும், சர்தேச சமூகத்துக்கும் உணர்த்த வேண்டும். எனவே ஒருமித்து ஒற்றுமையாக ஒரே அணியில் அனைவரும் வாக்களிக்க வேண்டும் - என்றார். (ப)

## மரண அறிவித்தல்

பிறப்பு
15.01.1938



இறப்பு
12.07.2020

### சுப்பிரமணியம் ஐயா முத்துக்குமாரசாமி ஐயா (J.P)

(தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தான பிரதம பூசகர், ஓய்வுபெற்ற மின்சார ஒப்பந்ததாரர்)

தொல்புரம் வழக்கம்பரையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் முத்துக்குமாரசாமி ஐயா நேற்று (12.07.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னபூரணம் தம்பதிகளின் மகனும், திலவதியின் அன்புக் கணவனும், மணிபல்லவன், சுகன்யா, வைதேகி, கௌதமி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2020) திங்கட்கிழமை மதியம் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம்,
வழக்கம்பரை.

தகவல்: குடும்பத்தினர்
021 225 1780

## மரண அறிவித்தல்



### திருமதி ராஜேஸ்வரி செல்லையா

வடமராட்சி துன்னாலை இந்திரம்மன் கோவிலடியை பிறப்பிடமாகவும் , வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராஜேஸ்வரி செல்லையா நேற்று (12.07.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பி - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும் சண்முகம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கதிரவேல், மகேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரியும் விக்கினேஸ்வரன் (ஜேர்மனி), நந்தினி தேவி, காலஞ்சென்ற பிரதாபன், நளினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு தாயாரும் சந்திரகலா (ஜேர்மனி), சூரியகுமார் (பீடாதிபதி விவசாயபீடம் யாழ் பல்கலைக்கழகம்), சிவரூபன் (அமெரிக்கா) ஆகியோரின் மாமியாரும் விதுசா, வினுகன், வினோஜா, தனுசிகன், மேவன், வர்மன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.07.2020) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கியான்காடு இந்து மாயனத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### தேவராசா தேவநந்தன்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா தேவநந்தன் கடந்த (10.07.2020) வெள்ளிக்கிழமை கனடாவில் அகலா மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தேவராசா மற்றும் சரஸ்வதி தம்பதியரின் தவப்புதல்வனும், நளாயினியின் அன்புக் கணவரும், ஆதீஸ், வைஸ்ணவன், தமிழ்வேந்தன், நந்தனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவநந்தினி (ஆசிரியை- சுவிஸ்), சுபாஜினி (சட்டதரணி-யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜெயபாலன் கலாவதி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற விஸ்வலிங்கம் மற்றும் பத்மாவதி தம்பதிகள், காலஞ்சென்ற கந்தையா முத்துப்பிள்ளை தம்பதிகள் ஆகியோரின் அன்புப் பேரனும், பரமராஜா (அப்பன்), கிசோ அன்ரன், கஜபாகு தமயந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பரண்யன், லக்ஷ்சுயன், தனுஷ்யன், திரிஷிகா ஆகியோரின் ஆசை மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
சுபாஜினி (சகோதரி)- 077 629 0269

தகவல்:
குடும்பத்தினர்.

## ஈஸ்வரபாதம் சரவணபவன்

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டம்

X 4

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



## பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய அரச பணியாளர்களே,

தேர்தல் காலம் என்பதால் இதைப் போன்ற பல்வேறு துண்டுப் பிரசுரங்கள் தபால் ஊடாக உங்களுக்குக் கிடைத்திருக்கலாம். ஏனைய வேட்பாளர்களாலும் அவை உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கலாம். இந்தக் கடிதத்தையும் அதைப்போன்றதொன்று என்று தூக்கி வீசிவிடாதீர்கள். இயந்திரமயமான வாழ்க்கையோட்டத்தில் எனக்காக, இரண்டு நிமிடங்களை ஒதுக்கி, முடிந்தால் வாசித்துப் பாருங்கள். இது எனது அன்பான கோரிக்கை.

கொரோனாவின் பின்னரான தேர்தல் காலம் என்பது பல முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. வீடு வீடாக வந்து அன்புறவாடுவது என்பது அசாத்தியமான ஒன்றாகிப் போயுள்ள நிலையிலேயே, கடிதம் ஊடாக எனது உறவுகளான உங்களுடன் மனம் திறந்து உரையாடுகின்றேன்.

மூன்றரை தசாப்தங்களாக தாயக மண்ணிலிருந்து தமிழ்த் தேசியத்தின் பாதையில், இன விடுதலைக்காகவும், தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும் தடம் மாறாமல் குரல் கொடுத்துவரும் ஒரேயொரு ஊடகமான உதயன் குழுமத் தலைவர் நான் என்பதை நன்கறிவீர்கள்.

நெடிய ஊடகப் பயணத்தில் உங்களுக்காக நானும், என் ஊடகமும் சந்தித்த இழப்புக்கள் ஏராளம். உயிர்ப்பலிகளும், தாக்குதல்களும், சோதனைகளும், வேதனைகளும், சொத்தழிவுகளும் தாராளம். ஒருமுறை அரச அதிகார வர்க்க ஏவலாளிகளால் எமது ஊடகப் பணியாளர்கள் படுகொலைசெய்யப்பட்ட, குருதி தோய்ந்த நாளிலும் கூட, துணிந்து நின்று பத்திரிகையை அடுத்த நாள் பிரசுரித்திருந்தோம்.

அதன் பின்னும் முன்னுமான பல தாக்குதல்களில் எமது ஊடகவியலாளர்கள் பலர், அதிகாரத் தரப்பை எதிர்த்து மக்களுக்கு குரல் கொடுத்தமைக்காக சுட்டுக் கொல்லப்பட்டனர். எமது பிரதம ஆசிரியரைக்கூட விபத்து என்ற போர்வையில் கொலைசெய்யும் முயற்சியிலிருந்து அவர் காயங்களோடு தப்பியிருந்தார். எமது அச்சியந்திரம் எரிக்கப்பட்டது. கைக்குண்டுகள் வீசப்பட்டன. எதற்கும் நாம் தளரவில்லை. அடிமேல் அடியாய் வீழ்ந்தபோதும், நாம் விழவில்லை, இன்னும் உரத்தோடும் திடத்தோடும் தமிழினத்துக்காகக் குரல் கொடுத்தோம். உலகளாவிய ரீதியில் 'துணிச்சலுக்கான பத்திரிகை' என்ற சர்வதேச விருதை எம்மால் பெறமுடிந்தது.

அதன் பின்னர் அரசியல் தளத்திலும் நான் தமிழ் மக்களுக்காகவே களமிறங்கினேன். ஊடகம், அரசியல் என்ற "இரட்டைக் குழல்" துப்பாக்கியாக தமிழ் மக்களின் உரிமைகளுக்காக, அபிலாஷைகளுக்காக, ஏக்கங்களுக்காக, விடிவுக்காக, அபிவிருத்திக்காக என் குரல் தாயகத்தைத் தாண்டி, நாடாளுமன்றிலும், சர்வதேச ரீதியிலும் ஓங்கி ஒலித்தது.

கடந்த இரண்டு தடவைகள் உங்களின் ஏகோபித்த வாக்குகளால் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட நான், உங்களின் நம்பிக்கையைப் பொய்ப்பிக்காமல் களத்தில் நின்ற மக்கள் சேவகன் என்பதும் உங்களுக்குத் தெரியும்.

வலி.வடக்கில் உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் மக்களின் நிலங்களை கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக ஆக்கிரமித்திருந்த படையினருக்கும் அரசுக்கும் எதிராக ஜனநாயகரீதியில் மக்களோடு மக்களாகப் போராடி, அந்த நிலங்களை மீட்பதில் என்னாலான அத்தனை முயற்சிகளையும் செய்திருந்தேன். இதன்போதெல்லாம் பல தடவைகள் என்னைப் படைப்புலனாய்வாளர்கள் தாக்கவும் முயன்றிருந்தனர்.

கிறிஸ்பூதம் என்ற பெயரில் புலனாய்வாளர்களை மக்களிடம் ஏவி, குழப்பத்தை ஏற்படுத்த அரசு முயன்றது. அப்போது மக்களை அந்தக் கிறிஸ்பூதங்களிடம் இருந்து காக்க நள்ளிரவு வேளையிலும் துணிந்து சென்று, படையினரோடு வாதாடி, கிறிஸ்பூதம் என்ற அச்சத்தை இல்லாமல் செய்தேன்.

யாழ். பல்கலைக்கழகத்தில் மாவீரர் நாளை அனுஷ்டிப்பதாகக் கூறி மாணவர் விடுதியைப் படைத்தரப்பு முற்றுகையிட்டபோது, அதனை உடைத்து, துப்பாக்கி முனைகளுக்கு அஞ்சாமல் அந்த இரவு வேளையிலும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்தேன். அடுத்தநாள் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் ஒரு ஜீப்பில் இரகசியமாக கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டிருந்த போது, அதனைக் கண்ணுற்று உடனடியாகவே படையினரின் பிடியில் இருந்து அவர்களைக் காப்பாற்றினேன்.

பட்டதாரிகள் தமக்கு அரச வேலை கேட்டு தொடர்ச்சியாகப் போராடியபோது, அவர்களோடு இணைந்து குரல் கொடுத்ததோடு, அரசுக்கு அவர்களது கோரிக்கைகளை முன்வைத்து அவர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும் வரை தொடர்ந்து முயற்சி எடுத்தவர்களில் நானும் ஒருவன் என்பதை அவர்கள் அறிவார்கள்.

மக்களின் உரிமைக்காக மட்டுமல்லாது, அவர்களின் பொருளாதார வாழ்வியல் முன்னேற்றத்துக்காகவும் நான் கடந்த காலங்களில் உழைத்தமையால், பல வீதிகள் புதுமெருகு பெற்றன. பாடசாலைகளுக்கும், சனசமூக நிலையங்க ளுக்கும் புதிய கட்டட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

உரிய வாழிடம் இன்றித் தவித்த குடும்பங்களுக்கு எனது முயற்சியால், வீட்டுத்திட்டங்கள் கிடைக்கப்பெற்றன. பல விளையாட்டுக் கழகங்களுக்குத் தேவையான உபகரணங்களும் கொடுக்கப்பட்டன. வாழ்வாதாரத்துக்காக ஏங்கிக்கொண்டிருந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோருக்கு தொழில் முயற்சிகள் வழங்கப்பட்டன. ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு கணினிப் பயிற்சிகள் இலவசமாக என்னால் வழங்கப்பட்டது. கடந்த ஐந்து வருடங்களில் மட்டும் யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கென. ரூபா 823, 057,905.76 என்னால் ஒதுக்கீடு செய்யப்பட்டு குறித்த பணிகள் பூர்த்தியாக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டன.

உங்களுக்கு இவையெல்லாம் தெரிந்திருக்கலாம். அல்லது தெரியாமலும் போயிருக்கலாம். எம்.பி பதவியிலிருந்த நான் மீண்டும் வேட்பாளராகக் களமிறங்கியிருப்பதால் எனது பதவிக்காலத்தில் என்ன செய்தேன் என்பதைச் சொல்வதுதானே நியாயம். அரச பணியாளர்களான நீங்கள் 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் எப்படி பணியாற்றினீர்கள் என்பதை நினைத்துப் பாருங்கள். அரசியல்வாதிகளின் கட்சி அலுவலகங்களுக்கு எத்தனை தடவை உங்களை அழைத்து அலைக்கழித்திருப்பார்கள். அவர்களின் அமைப்பாளர்கள் உங்களுக்கு எப்படியெல்லாம் தொந்தரவு கொடுத்திருப்பார்கள். சுதந்திரமாக நீங்கள் பணியாற்ற முடியாது. அந்த அரசியல்வாதிகள் சொல்வதை திரும்பிக் கேள்வி கேட்காமல் செய்யவேண்டும். மக்களுக்காகப் பணியாற்ற நீங்கள் முனைந்திருந்தால் தூக்கிப் பந்தாடப்பட்டிருப்பீர்கள். ஒவ்வொரு நாளும் துன்பத்தில் துவண்டு துவண்டு அரச பணியிடங்களில் பணியாற்றியிருப்பீர்கள்.

ஆனால் கடந்த 5 ஆண்டுகளில் அப்படியானதொரு நிலைமை உங்களுக்கு ஏற்படவில்லை. சுதந்திரமாக, சுயாதீனமாக உங்கள் பணிகளைத் திறம்படச் செய்திருந்தீர்கள். அபிவிருத்தித் திட்டங்களுக்கு பெருமளவு நிதிகளை நாம் பெற்றுத் தந்தபோது, உங்கள் அர்ப்பணிப்பான சேவையால் ஒரு சத நிதிகூடத் திரும்பாமல் மக்களின் வாழ்வை வளமாக்கினீர்கள். அத்தகைய சுதந்திரமான சூழலில் மீண்டும் நீங்கள் உற்சாகத்துடனும், உத்வேகத்துடனும் பணியாற்ற வேண்டும்.

அதற்காக மக்களின் உரிமைக்காகவும், நலனுக்காகவும் நாம் இன்னும் ஜனநாயகரீதியாகப் போராட வேண்டியுள்ளது. இப்போதுள்ள சூழலில் அரசியல் ரீதியான பலமே எம் ஜனநாயகப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கக் கூடியது. எந்தளவுக்கு நாம் அதிக ஆசனங்களைப் பெற்று, தமிழ்த் தரப்பின் ஏக பிரதிநிதிகளாகச் செல்கின்றோமோ அந்தளவுக்கு அரசும் மக்கள் நலன்சார்ந்த எம் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்கும் நிலை உருவாகும்.

இனிவரும் காலங்களில் தமிழ் மக்களின் உரிமைக்கான அரசியல்ரீதியான போராட்டத்தைத் தொடர்வதற்கு சமாந்தரமாக மக்களின் அபிவிருத்திப் பணிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவுள்ளேன். குறிப்பாக வடக்கு, கிழக்கில் தமிழ்ப் பிரதேசங்களில் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் அரசபணிக்கு நியமிக்கப்படுகின்றமையைத் தடுத்து நிறுத்தல், இளையோருக்கு அவரவர் தகுதிக்கு ஏற்ப வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்,அரச அலுவலர்களின் நலன்களைப் பேணும் வகையிலான நடவடிக்கைகள் என்பவற்றை இன்னும் தீவிரப்படுத்துவேன்.

என்றும் தடம்மாறாத கொள்கையோடு, தமிழ்த் தேசியத்துக்காகவும், தமிழ் மக்களின் விடிவுக்காகவும் ஜனநாயக ரீதியாகப் போராடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தும் வரலாற்றுக் கடமை உங்களைச் சார்ந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் என்னுடன் மேலும் 9 சக வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். எனது தனித்துவமான சேவைகள் தொடரவேண்டும் என்று நீங்கள் விரும்பினால், தமிழரின் உரிமைக்கான எனது அரசியல் பாதை தொடர வேண்டும் என்று நீங்கள் கருதினால், என்னை நீங்கள் வெல்ல வைக்கலாம்.

ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்திவிடாதீர்கள். கூட்டமைப்பை பலவீனப்படுத்துவதும், தமிழர்களைப் பலவீனப்படுத்துவதும் ஒன்றே.

அன்புரிமையுடன்

(ஈஸ்வரபாதம் சரவணபவன்)

X 4

# தேர்தல் திருத்த சாபக்கேடே விருப்பு வாக்குமுறைமை

*குறிப்பிடுகின்றார் பீரிஸ்*

கொழும்பு, ஜூலை 13

அதிகார முரண்பாட்டைத் தோற்றுவித்துள்ள அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை முழுமையாக மாற்றி நாட்டுக்கு பொருந்தும் வகையிலான புதிய அரசமைப்பை உருவாக்குவது புதிய அரசின் நோக்கமாகும். விருப்பு வாக்கு முறைமை தேர்தல் திருத்தத்தின் சாபக்கேடு என்று பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி . எல். பீரிஸ் தெரிவித்தார்.

மாத்தறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிபந்தனைகளுக்கு அடிபணியும் பட்சத்தில் பலவீனமான அரசே தோற்றம் பெறும். இதனை கடந்த கால அரசின் நிலவரங்கள் ஊடாக அறிந்துகொள்ளலாம். பெரும்பான்மை ஆதரவுடன் அரசமைத்து பல விடயங்களை திருத்திக் கொண்டால் மாத்திரமே சிறந்த அரச நிர்வாகத்தை கட்டியெழுப்ப முடியும். பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றால் மாத்திரமே பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும். குறைவான ஆசனங்களைப் பெற்று அரசை அமைப்பதற்கு பிற கட்சிகளின் ஆதரவைக் கோரும்போது அவர்களின் நிபந்தனைகளுக்கு அடிபணிய நேரிடும்.

நாட்டுக்கு தற்போது புதிய அரசமைப்பு அவசியமாகவுள்ளது. புதிய அரசில் 19ஆவது திருத்தம் நீக்கப்பட்டு, முரண்பாடற்ற விதத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும்.

தேர்தல் முறைமையில் விருப்பு வாக்கு முறைமை ஒரு சாபக்கேடு என்று குறிப்பிட வேண்டும். இணக்கமாகச் செயற்படும் கட்சிக்குள்ளும் விருப்பு வாக்கு முறைமை முரண்பாட்டைத் தோற்றுவிக்கும். ஆகவே புதிய அரசில் விருப்புவாக்கு முறைமை நீக்கப்பட்டு முரண்பாடற்ற தேர்தல் முறைமை அறிமுகம் செய்யப்படும்.

பொதுஜன பெரமுன மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை, எதிர்பார்ப்பு ஆகியனவற்றை நிறைவேற்ற வேண்டுமாயின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு அவசியமாகும் - என்றார். (த)

# முப்படைகளால் செய்யமுடியாததை 3 கட்சிகளால் செய்துவிடமுடியுமா?

*கேட்கின்றார் கணேஸ் வேலாயுதம்*

**கிளிநொச்சி, ஜூலை 13**

**முப்படைகளையும் வைத்து செய்யமுடியாத வேலையை மூன்று தமிழ்க் கட்சிகள் செய்துவிட முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் கணேஸ் வேலாயுதம் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற கட்சி அலுவலகத் திறப்பு நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அன்று சிங்கள அரசுக்கு எதிராக போராட்டத்தை ஆரம்பித்தோம். இன்று தமிழ் அரசியல்வாதிகளிடமிருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டிய நிர்ப்பந்த நிலையில் இருக்கின்றோம். தமிழ் அரசியல்வாதிகள் வேண்டாம்என்றுதான்83ஆம்ஆண்டுகளில் இயக்கங்கள் உருவாக்கப்பட்டன. 30 வருடங்கள் போர் செய்தோம். விடுதலைப் புலிகள் கூட சர்வதேச நாடுகளால் தோற்கடிக்கப்பட்டனர்.

இன்று இனவாதம் பேசும் மூன்று தமிழ்க் கட்சிகளும் என்ன விடயத்தைச் சாதிக்கப் போகின்றார்கள் என்று தெரியவில்லை. முப்படைகளையும் வைத்து சாதிக்க முடியாத வேலையை தாங்கள் சாதிக்கலாம் என்று இவர்கள் எண்ணுகின்றார்கள். சர்வதேச நாடுகள் வரும், ஐக்கிய நாடுகள் சபை வரும், இந்தியா எங்களுக்கு பின்னால் நிற்கிறது என்றெல்லாம் சொல்லி எத்தனை நாள்கள் எங்களை ஏமாற்றப் போகின்றார்கள்?.

நாங்கள் தீர்வு என்று சொல்லிக்கொண்டு எல்லாவற்றிலும் பின்னிலையிலுள்ளோம். கல்வியில் கடைசி நிலையில் உள்ளோம். கிளிநொச்சி மாவட்டம் கல்வியில் கடைசி மாவட்டமாக உள்ளது. தீவகம் இலங்கையில் கடைசி வலயமாக உள்ளது - என்றார். (த-6)

# மலையக மக்கள் இ.தொ.காவை பலமாக்க வேண்டியது அவசியம்

*நுவரெலியா மாவட்ட வேட்பாளர் மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 13

மலையக மக்கள் ஓரணியில் நின்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸை பலப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார் அந்தக் கட்சியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளரான மருதபாண்டி ராமேஷ்வரன்.

ஹற்றனில் நேற்று இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நுவரெலியா மாவட்டத்தின் தலைமை வேட்பாளராக தலைவர் ஆறுமுகன் தொண்டமானே நியமிக்கப்பட்டிருந்தார். அவரின் மறைவின் பின்னர், அந்தப் பதவி வேறு யாரிடமோ சென்றுவிடும் என சிலர் கூறினர். அவ்வாறு செல்லவில்லை. தலைமை வேட்பாளர் பதவி ஜீவன் தொண்டமானுக்கே வழங்கப்பட்டது. அவருக்கு அனுபவம் இல்லையென்றால் அப்பதவியை பெரமுன தரப்பினர் வழங்கியிருப்பார்களா?

கடந்த நான்கு வருடங்களாக செல்லும் இடங்களுக்கெல்லாம் ஜீவனை, தலைவர் அழைத்துசென்றார். பயிற்சிகளை வழங்கினார். எனவே, இ.தொ.கா. என்ற பலம்வாய்ந்த அமைப்புக்கு எவரும் பாடம் கற்றுக்கொடுக்கவேண்டியதில்லை. சமூகத்தை வழிநடத்தும் சக்தியும், அனுபவமும் எமக்கு இருக்கின்றது - என்றார். (ம)

# சுதந்திரக் கட்சியின் அடுத்த தலைவர் யார்?

கொழும்பு, ஜூலை 13

பொதுத் தேர்தலின் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலகவுள்ளேன் என்று அந்த கட்சியின் தற்போதைய தலைவர் மைத்திரிபால சிறிசேன களுத்துறையில் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தெரிவித்திருந்தார்.

அவரது இந்த அறிவிப்பை அடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த தலைவர் யார் என்பது குறித்து சமூகத்தின் கவனம் திரும்பியுள்ளது. வீழ்ச்சியடைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீளக் கட்டியெழுப்புவதற்காக இளைஞர்களிடம் கட்சியின் தலைமைத்துவத்தை வழங்க வுள்ளதாக மைத்திரிபால சிறிசேன கூறியி ருந்தார்.

மைத்திரிபால சிறிசேனவுக்கு பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைத்துவத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய இளம் தலைவர்கள் குருணாகல் மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களிலேயே இருக்கின்றனர்.




அநுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த இளம் தலைவர் , குருணாகல் மாவட்டத்தை சேர்ந்தவரை விட 12 வருடங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர் எனக் கூறப்படுகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, குருணாகல் மாவட்டத்தைச் சேர்ந்தவர். அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க அநுராதபுரம் மாவட்டத்தை சேர்ந்தவர். (த)

# அதாவுல்லாவா அல்லது தமிழரா திகாமடுல்லவில் வெல்வது எவர்?

*சயனொளிபவன் இவ்வாறு பரப்புரை*

கொழும்பு, ஜூலை 13

நான்கு ஆசனங்கள் சிங்கள மக்கள் இடையேயும், இரண்டு ஆசனங்கள் முஸ்லீம் மக்கள் இடையேயும் உறுதிப்படுத்தப்பட்டதன் விளைவாக எஞ்சி இருக்கும் ஒரு ஆசனம் எந்தத் தரப்பினருக்குக் கிடைக்க போகின்றது என்பதே தற்பொழுது எழுந்துள்ள கேள்வியாகும். பெரும்பாலும் இந்த ஒரு ஆசனத்தைப் பெற்றுக்கொள்ளப் போவது அதாவுல்லாவா, இல்லை தமிழ் மக்களா என்பதே இங்கு பிரதான கேள்வியாக எழுந்துள்ளது என திகாமடுல்ல மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் இரா.சயனொளிபவன் தெரிவித்தார்.

நாவிதன்வெளியில் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

திகாமடுல்ல மாவட்டத்தில் 2020க்கான நாடாளுமன்றத் தேர்தல் பல புதிர்களைப் படைக்கக்கூடிய வகையில் அமையும் என்பதில் எதுவித ஐயப்பாடும் கிடையாது. இம்முறை தேர்தலிலே பல தேசிய மற்றும் பேரினவாதக் கட்சிகளும், அத்தோடு எண்ணிலடங்கா வேட்பாளர்களும் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 7 ஆசனங்களுக்காகப் போட்டி போடுகின்றனர். இவற்றில் ஆசனங்களைக் கைப்பற்றக் கூடிய பலம் வாய்ந்த கட்சிகள் என்ற வகையில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன, சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் என்பவை முன்னிலை வகிக்கின்றன.

இதனடிப்படையில் நான்கு ஆசனங்கள் சிங்கள மக்கள் இடையேயும், இரண்டு ஆசனங்கள் முஸ்லீம் மக்கள் இடையேயும் உறுதிப்படுத்தப்பட்டதன் விளைவாக எஞ்சி இருக்கும் ஒரு ஆசனம் யாருக்கு கிடைக்கப் போகின்றது என்பதே தற்பொழுது எழுந்துள்ள கேள்வியாகும். பெரும்பாலும் இந்த ஒரு ஆசனத்தைப் பெற்றுக்கொள்ளப் போவது அதாவுல்லாவா இல்லை தமிழ் மக்களா என்பதே இங்கு கேள்வியாக உள்ளது - என்றார். (ம)

# ரிஷாத்தின் கட்சியில் இணைந்தார் ஜான்சி

தேசிய காங்கிரஸ் கட்சியின் வடக்கு மாகாண முன்னாள் அமைப்பாளரும் மகளிர் அணித்தலைவியுமான ஜான்சிராணி சலீம் அண்மையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இணைந்து கொண்டார்.

கட்சியின் தேசிய தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீனின் பணிப்புரைக்கமைய கட்சியின் மகளிர் விவகாரங்களுக்கான தேசிய அமைப்பாளராகவும் அவர் நியமிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. அதற்கான நியமனக் கடிதத்தை கட்சியின் செயலாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொண்டு கருத்து தெரிவித்த ஜான்சிராணி.

இலங்கை அரசியல் வரலாற்றில் தனது சமூகத்தின் நலனுக்காக மறைந்த பெருந்தலைவர் அஸ்ரப்புக்கு பின் எந்தச் சந்தர்ப்பத்திலும் கம்பீரமாக குரல் கொடுக்கக்கூடிய ஒரேயொரு தலைவர் முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனே. அவரிடம் அதிகாரம் இல்லாத நிலையிலும் அவரும் எமது முஸ்லிம் சமூகமும் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்ற இந்த வேளையில் அவரின் கரத்தை பலப்படுத்துவதன் மூலமே சமூகத்தின் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும்-என்றார் (த-ந)

# நிலத்தைப்பற்றிச் சிந்தித்த அரசு மக்களைப்பற்றி சிந்திக்கவில்லை

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் சீற்றம்



**யாழ்ப்பாணம், ஜூலை 13**

**2009ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து தெற்கில் மிகப்பெரும் போர் வெற்றிவிழா கொண்டாடப்பட்டது. அவர்கள் தமது நிலத்தைப் பற்றித்தான் சிந்தித்தார்கள். வடமாகாண மக்கள் அன்று சந்தித்த அவல நிலையைப்பற்றி அவர்கள் இம்மியும் சிந்திக்கவில்லை, இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வேட்பாளருமான ஈஸ்வரபாதம் சரவணபவன்.**

நேற்றுமுன்தினம் தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர். சரவணபவன் மேலும் தெரிவித்ததாவது:
2009ஆம் ஆண்டு இறுதிப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபோது வடபகுதி மக்கள் அனுபவித்த சொல்லொணாத் துன்பங்களை இந்த அரசு கவனிக்கவில்லை. ஏகப்பட்ட துன்பியல்புகளைக் கவனிக்காமல் தமது வெற்றிக் கொண்டாட்டத்தில் மட்டுமே அரசு கவனம் செலுத்தியது. கோயில்களை அழித்தனர், பாடசாலைகளை அழித்தனர், மருத்துவமனைகளை அழித்தனர். இன்னும் என்னவெல்லாம் அழிக்கப்படக் கூடாதோ அவற்றையெல்லாம் அவர்கள் அழித்தனர். ஆனால் இதில் எவையும் உரிய முறையில் அவர்களால் மீண்டும் கட்டிக்கொடுக்கப்படவில்லை.
வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர வேறு எந்தக் கட்சிக்கும் உரிமையில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அல்லது சுதந்திரக் கட்சிக்கோ அல்லது வேறு எந்தக் கட்சிக்குமோ உரிமை இல்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் ஒருவர் இன்று தேர்தல் விதிகள் பலவற்றை மீறி பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார். ஆனால் இதுவரை அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எந்தப் பேரினவாதக் கட்சிக்கேனும் எமது மக்கள் வாக்களிக்கக் கூடாது.
இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 7 ஆசனங்களையும் கைப்பற்றும். அனைத்துக் கட்சிகளும் தமக்குள் பிளவடைந்து நிற்கின்றன. அனைத்துக் கட்சிகளுக்குள்ளும் இருக்கும் பிளவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கூடுதல் சாதகம். மக்களும் இதைப் புரிந்து கொண்டு கூட்டமைப்புக்கு வாக்களித்து கூட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டும். நாம் எந்தவொரு விடயத்துக்கும் விலைபோகாமல் தொடர்ந்து பயணிப்போம் - என்றார். (ம)

---

## கண்டியில் கோத்தாபய பரப்புரை!

கொழும்பு, ஜூலை 13
கண்டியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷவும் கலந்து கொண்டுள்ளார்.
கண்டி மாவட்ட வேட்பாளர் பாரத் அருள்சாமியின் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பரப்புரைக் கூட்டத்திலேயே ஜனாதிபதி கோத்தாபயவும் கலந்துகொண்டார். இந்தப் பரப்புரையைத் தொடர்ந்து கண்டி மக்களின் கோரிக்கை அடங்கிய மனுவொன்றை பாரத் அருள்சாமி ஜனாதிபதியிடம் கையளித்தார். (ம)

---

## அரசியல் பழிவாங்கல் இனிமேல் நடக்காது!

### சொல்கிறார் மஹிந்த

கொழும்பு, ஜூலை 13
நல்லாட்சி அரசாங்கத்தில் நடைபெற்ற அரசியல் பழிவாங்கல்கள் எதிர்காலத்தில் நடைபெறாது என பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ தெரிவித்துள்ளார்.
களுத்துறை பகுதியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
'ஐ.தே.க பிளவடைந்து காணப்படுகின்றமையினால் பொதுமக்கள் முன்னணியின் வெற்றி தற்போது உறுதியாகியுள்ளது. மேலும் கடந்த அரசில் அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெற்றன. ஆனால் இனிவரும் காலங்களில் அவ்வாறான செயற்பாடுகள் ஒருபோதும் இடம்பெறாது. இதேவேளை குற்றச்செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் நாட்டை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான அனைத்துச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படும்'- என்றார். (ம)

---

## ஒற்றுமையின்மையால் மலையகம் 30 ஆண்டுகள் பின்தங்கியுள்ளது!

### ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

ஒற்றுமையின்மை மற்றும் குறைகூறும் அரசியலாலேயே மலையகம் 30 ஆண்டுகள் பின்தங்கிய நிலையில் உள்ளது. ஆனால், எமது சமூகம் அடுத்து வரும் காலப்பகுதியில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் என்னிடம் தெளிவான வேலைத்திட்டங்கள் உள்ளன என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.
ஹட்டனில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
'தம்மைத் தாமே அரசியல் ஜாம்பவான்கள் எனக்கூறிக்கொள்ளும் சில அரசியல்வாதிகள், கடந்தகாலம் முழுவதும் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு தொடர்பில் குறைகூறியே ஏனைய பிரச்சினைகளை மூடிமறைத்தனர். இன்று படித்த இளைஞர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு கல்விக்கேற்ப வேலை இல்லை. அதேபோல் சொந்தக் காலில் நிற்பதற்கு முயற்சிக்கும் இளைஞர்களுக்கு சுயதொழில் வாய்ப்புகளும் இல்லை. மலையக மக்களுக்கு தோட்டத்தொழிலைத் தவிர வேறு எதுவும் தெரியாது என சிலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். இந்நிலைமையை மாற்றவேண்டும்.
மலையகத்தில் நகரப்பகுதிகளில் கூலி வீடுகளில் வாழ்பவர்களுக்கான வீட்டுத்திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பிலும் எனது தந்தை திட்டமிட்டிருந்தார். ஆனால் அவரை விமர்சித்தனர். இன்று என்னை விமர்சிக்கின்றனர். இவர்களால்தான். மலையகத்துக்கு போதைப்பொருள் வந்தது எனக்கூறி கீழ்த்தரமான அரசியலை நடத்துவதற்கு நான் விரும்பவில்லை. ஆனால், போதைப் பொருள்களை ஒழிப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தி மலையகத்தில் அதனைத் தடுப்போம்.
ஹட்டன் சந்தை ஹட்டனின் அடையாளம். அதனை திருத்தி அழகுப்படுத்தினால்போதும். ஹட்டனில் மேலும்பலதிட்டங்கள் முன்னெடுக்கப்படும். நிச்சயம் ஹட்டனை மலையகத் தமிழர்களின் தலைநகராக மாற்றலாம். நாம் ஆளுங்கட்சியில் இருக்கின்றோம். எனவே, எமக்கு வாக்களித்தால்தான், எமது மக்கள் வாக்களித்துள்ளனர் எனக்கூறி பேரம்பேசி, மக்களுக்கான தேவைகளை இலகுவில் நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.
இது என்னுடைய மலையகம். நீங்கள் என்னுடைய மக்கள். எனவே, இன்னும் 20 ஆண்டுகளில் மலையகம் எவ்வாறு இருக்கவேண்டும் என்ற இலக்கு என்னிடம் உள்ளது. அதனை நோக்கியே நாம் பயணிக்கவேண்டும். அதற்கு உங்களின் ஒத்துழைப்பும் அவசியம்' - என்றார். (ம)

---

## எம்.சி.சி. உடன்பாட்டை கிழித்தெறிய முடியுமா?

### அரசுக்கு சஜித் சவால்

கொழும்பு, ஜூலை 13
முடிந்தால் அமெரிக்காவுடனான எம்.சி.சி உடன்பாட்டை கிழித்தெறிய முடியுமா என்று அரசுக்கு சவால் விடுத்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான சஜித் பிரேமதாஸ.
ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைந்திருந்த காலத்தில் மஹிந்த தரப்பினர் எம்.சி.சி ஒப்பந்தத்தை கிழித்தெறிய வேண்டும் என்று வலியுறுத்தி வந்தனர். இந்த ஒப்பந்தத்தால் அமெரிக்காவிடம் இலங்கை விற்கப்படவுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய வெற்றி பெற்ற பின்னர் மஹிந்த தரப்பினர் ஆட்சியமைத்துள்ளனர். எனினும் எம்.சி.சி ஒப்பந்தத்தை கைவிடுவது தொடர்பில் அவர்கள் மௌனம்காத்து வருகின்றனர். இந்த நிலையிலேயே 'எம்.சி.சி ஒப்பந்தத்தை முடிந்தால் கிழித்து எறியுங்கள்' என்று அரசுக்குச் சவால் விடுத்துள்ளார் சஜித்.
அக்குரஸ்ஸ பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே சஜித் இந்தச் சவாலை விடுத்துள்ளார். (ம)

# முஸ்லிம் மக்களை வந்தேறு குடிகள் என்று கூறுவதற்கு கருணாவுக்கு அருகதையில்லை

## ஹரீஸ் சீற்றம்

**அம்பாறை, ஜூலை 13**

**'முஸ்லிம்களை வந்தேறு குடிகளெனக் கூறுவதற்கு, தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் விநாயக மூர்த்தி முரளிதரன் எனும் கருணாவுக்கு எவ்வித அருகதையுமில்லை. அவரே வந்தேறு குடியாக பொதுத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடுகின்றார்' இவ்வாறு முன்னாள் இராஜாங்க அமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.**

மாவடிப்பள்ளியிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாட்டின் நீண்ட தொன்மை வரலாறு கொண்ட உரிமை உருத்துடைய முஸ்லிம்களை வந்தேறு குடிகளென விநாயகமூர்த்தி முரளிதரன் எனும் கருணா பிதற்றித் திரிவது கேலிக் கூத்தானதாகும். முஸ்லிம் சமூகத்தை அடக்கி ஆளலாமென மனப்பால் குடித்துக் கொண்டிருக்கும் கருணா, எம்மை வந்தேறு குடிகளெக் கூறுவதற்குத் துளியும் அருகதையற்றவர். அவரது கீழ்த்தர நோக்கு ஒருபோதும் வெற்றியளிக்கப் போவதில்லை.

தமது சொந்த மாவட்டத்தில் போட்டியிட வக்கற்று, பொதுத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் களமிறங்கியுள்ள அவர் அரசியல் வந்தேறுகுடி ஆவார். பசுத்தோல் போர்த்திய புலியாக இங்கு இறக்குமதியாகியுள்ள கருணா அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்களின் இருப்பைக் கேள்விக் குறியாகிவிடும் விதத்தில் குறிப்பாக தமிழ், முஸ்லிம் மக்களிடையேயான நல்லுறவையும், புரிந்துணர்வையும் சீர்குலைக் கத்தக்க கீழ்த்தர செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றார். போர்க் குற்றவாளியான கருணாவின் பசப்பு வார்த்தைகளும், நச்சுக் கருத்துக்களும் தமிழ் மக்களிடம் ஒருபோதும் எடுபடப்போவதில்லை. அவரது கொட்டம் அடங்கும் காலம் வெகு தூரத்திலில்லை.

நாம் பனங்காட்டுநரிகள், கருணாவின் சலசலப்புக்கு ஒருபோதும் அஞ்சமாட்டோம். பூச்சாண்டிகளுக்கு அஞ்சவும் மாட்டோம். முஸ்லிம்களின் இதயமாகத் திகழும் அம்பாறை மாவட்டத்திலும் குறிப்பாக முக வெற்றிலையாகத் திகழும் கல்முனை மாநகரிலும் இவரது வாலாட்டங்கள் எடுபடமாட்டாது.

தமிழ் மக்களுக்கு யாழ்ப்பாணம் எந்தளவு முக்கியமோ அவ்வாறே முஸ்லிம்களுக்கு கல்முனை மாநகரம் முக்கியமாகும். கருணாவின் சில்லறைச் சேட்டைகளுக்கு தக்கபாடம் புகட்டுவோம். என்னை பொதுத்தேர்தலில் தோற்கடித்து கல்முனை நகரைக் கைப்பற்றலாமென அவர் பகற்கனவு காண்கிறார்.

திகாமடுல்ல தேர்தல் மாவட்ட தமிழ் மக்களது வாக்குகளை தமது பசப்பு வார்த்தைகளால் சூறையாடி நாடாளுமன்றத்திற்குச் செல்லலாமென எண்ணும் அரசியல் வந்தேறுகுடியாகவுள்ள கருணாவுக்கு எமது மாவட்ட தமிழ் மக்கள் மறக்க முடியாத பாடத்தை தமது ஜனநாயக உரிமை மூலம் இம்முறை புகட்டவுள்ளனர். முடிந்தால் கருணா இங்கு தேர்தலில் வென்றுகாட்டட்டுமெனப் பகிரங்க சவால் விடுக்கின்றேன்.

தமது வாயினாலேயே தாம் யுத்தக் குற்றவாளி என்பதற்கான காரணத்தை ஒப்புக் கொண்டுள்ள கருணாவை அரசு இதுவரை கைது செய்யாமலிப்பது ஏன் என்பதும் புரியாத புதிராகவே உள்ளது. கொலை யாளியென ஒப்புக் கொண்டுள்ள அவரை அரசு ஏன் பாதுகாக்கின்றது?

முன்னாள் அமைச்சர் ரிஷாட் இந்த மாவட்டத்தில் தனித்துப் போட்டியிட தமது கட்சிசார்பில் வேட்பாளர்களை நிறுத்தி யுள்ளமை மூலம் மாவட்ட முஸ்லிம்களிடையே பிரிவினையை ஏற்படுத்தியுள்ளார். எனவே முஸ்லிம் காங்கிரசிற்கு இம்முறையும் எம்மக்கள் ஆணை தரவேண்டும். சமூகத்தை நாம் பாதுகாப்போம்' - என்றார். (ம-30)

தேர்தல் களம்

# வெளிவிவகார அமைச்சராக ஆசைப்படுகிறார் சுமந்திரன்

## சுரேஸ் பிரேமச்சந்திரன் சாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 13

சுமந்திரனைப் பொறுத்தவரை அவருக்கு இலங்கையினுடைய வெளிவிவகார அமைச்சராகுவதற்கு விருப்பம் இருக்கிறது. முன்னாள் வெளிவிவகார அமைச்சராக இருந்த லஷ்மன் கதிர்காமருக்குப் பின்னர் இலங்கையின் வெளிவிவகார அமைச்சராக தான் இருக்க வேண்டும் என்பதில் அதிக விருப்பம் இருக்கிறது. அதனால்தான் பேரம்பேசி அமைச்சுப் பதவியைப் பெறுவதற்கு வலுவான நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் கேட்டு நிற்கின்றார் என்று தெரிவித்தார் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

ஊரெழுவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அ்வர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஒரு கூட்டத்தில் சுமந்திரன் 'நாங்கள் அமைச்சுப் பதவிகளை எடுக்க இருக்கின்றோம். நல்ல அமைச்சுப் பதவிகளை எடுப்பதற்கு அதற்காக பேரம் பேசுவதற்கு எங்களுக்கு ஒரு வலுவான நாடாளுமன்றக் குழு தேவை' என்று கூறியுள்ளார். சுமந்திரனைப் பொறுத்தவரை அவருக்கு இலங்கையினுடைய வெளிவிவகார அமைச்சராகுவதற்கு விருப்பம் இர்ுக்கிறது. முன்னாள் வெளிவிவகார அமைச்சராக இருந்த லஷ்மன் கதிர்காமருக்குப் பின்னர் இலங்கையின் வெளிவிவகார அமைச்சராக தான் இருக்கவேண்டும் என்பதில் அதிகவிருப்பம் இருக்கிறது. அதனால்தான் பேரம் பேசி அமைச்சுப் பதவியைப் பெறுவதற்கு வலுவான நாடாளுமன்றக் குழுவைக் கேட்டுநிற்கின்றார்.

எமது கூட்டணியில் இணையும்படி ஒன்றரை வருடமாக கஜேந்திரகுமாருடன் பேசியிருந்தோம். ஆனால் அவர்கள் மறுத்துவிட்டார்கள். தனித்து நின்று எதனையும் சாதிக்க முடியாது. கூட்டாக இணைந்தால் தான் எதனையும் பெறமுடியும். தேர்தலின் பின்னர் இன்னும் எமது கூட்டணி விரிவுபடுத்தப் படும். தமிழ் மக்களினுடைய கோரிக்கைகளை வென்றெடுக்க கூடியதாக எமது கூட்டணி மாறும்' - என்றார். (ம)

# இ.தொ.காவை பலப்படுத்துக!

## கனகராஜ் கோரிக்கை

மலையகம், ஜூலை 13

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் அமையவுள்ள பலம்வாய்ந்த அரசில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பலமாக இருந்தால்தான் எமது மக்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்து, சாதனைகளை படைக்ககூடியதாக இருக்கும். எனவே, மக்கள் பேராதரவை வழங்கவேண்டும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், ஊடகப் பேச்சாளருமான கணபதி கணகராஜ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இன்று எமது சமுகத்தின் எதிர்ப்பார்ப்பு, இளைஞர்களின் அபிலாசைகள் எல்லாம் வெவ்வேறான நோக்கங்கள், இலக்குகளைக் கொண்டதாக அமைந்திருக்கின்றன. அவற்றை அடைவதற்கான வழியை காட்டுவதற்காக மலையகத்திலிருந்து புதிய தலைமைத்துவம் புறப்பட்டிருக்கின்றது. தம்பி ஜீவனின் பேச்சு, சிந்தனை என்பவற்றை பார்க்கும்போது, ஒரு சாதாரண வட்டத்துக்குள் சுழலாமல், தூரநோக்கு சிந்தனை இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இன்னும் 50 வருடங்களுக்கு தேவையான அடித்தளத்தை இந்த தேர்தல் போடவுள்ளது. ஒற்றுபட்டிருந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் நாம் வென்றிருக்கின்றோம். ஐயா சௌமியமூர்த்தி தொண்டமான் காலத்திலும், மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமான் காலத்திலும் இது நடைபெற்றுள்ளது. தற்போதும் மக்கள் ஒன்றுபட்டுள்ளனர். இதன் வெளிப்பாடாகவே கூட்டங்களுக்கு அணி திரண்டு வருகின்றனர். காங்கிரசுடன் இணைகின்றனர். பல துறைகளை சேர்ந்தவர்களும் ஆதரவை வெளிப்படுத்திவருகின்றனர் - என்றார். (ம)

# பிரபாகரனின் வீட்டிலிருந்து வெளியேறி துரோகமிழைக்கிறார்

## விக்கியைச் சாடுகின்றார் மகேந்திரன்

யாழ்ப்பாணம், ஜூலை 13

அரசியல் சாணக்கியமே தெரியாத வெறும் ஆன்மீகவாதியான முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் பிரபாகரன் கட்டிய வீட்டில் இருந்து வெளியே வந்தவர். இன்று அந்தக்கட்சிக்கே துரோகமிழைத்து மீன் கட்சியில் வாக்கு கேட்க கொழும்பில் இருந்து வந்திருக்கிறார். தேர்தல் முடிவு 6 ஆம் திகதி இரவு வந்தவுடன் மீண்டும் கொழும்பு சென்று சிங்கள உறவுகளுடன் கைகோர்த்து தனது அடுத்த கட்ட பணியை ஆரம்பிக்கவுள்ளார்.

இவ்வாறு மானிப்பாய் பிரதேச சபை சிரேஸ்ட உறுப்பினர் சி. மகேந்திரன் தெரிவித்தார்.

மானிப்பாய் பிரதேச சபையின் அபிவிருத்திக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபையை வெறும் பூச்சியமாக்கிய விக்கினேஸ்வரன் மீன் போட்ட கட்சித் துண்டுடன் வீதி வலம் வர இருக்கிறார்.

மாகாண சபை நடைபெற்ற ஐந்து வருடங்களில் வடக்கு மக்களுக்கு உரிய உட்கட்டுமான அபிவிருத்திகளை முன்னெடுக்காமலும் அங்கு இடம்பெற்ற நீரில் கலந்த ஒயில் பிரச்சினை, நெல்சிப் ஊழல் போன்ற விடயங்களுக்கு தீர்வு காணாமல் வடக்கு மீன்பிடி அமைச்சர் டெனீஸ்வரனை பதவி நீக்கம் செய்து அந்த வழக்கிலும் தோல்வி கண்டவர்தான் தற்போது சிதைந்து போன வீடு பற்றி கதையளக்கிறார்.

- என்றார். (கு-50)

# இனத்துவேசத்தால் வாக்குச் சேகரிப்பு!

## ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் இப்படித் தெரிவிப்பு

தெற்கில் பலர் இனத் துவேசத்தைக் கிளப்பு வாக்குகளைச் சேகரிக்க முற்படுகின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான அப்துல்லா மஹ்றூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நேற்று மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எமது கட்சி எட்டுக்கும் குறையாத ஆசனங்களை பெறுகின்ற போது கவனத்தை ஈர்க்கும். ஓகஸ்ட் ஆறாம் திகதிக்கு பின் எந்தவித குற்றமும் அற்றவர் ரிசாத் என்பதை அவர்களே சொல்வார்கள். பலமிக்க மக்கள் ஆணையை இதற்காக வழங்குங்கள். ஆயிரம்வருடங்கள் முஸ்லிம்கள் வாழ்ந்து வந்த இந்த நாட்டில் எம்மை கொச்சைப்படுத்த நினைக்கிறார்கள். இதற்கான முடிவுகளை நாமும் தலைவர் ரிசாதின் கைகளை பலப்படுத்துவதன் ஊடாக காண முடியும் - என்றார். (ம)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வீணடிக்காதீர் வாக்குகளை!

இன்று முதல் தபால் வாக்களிப்பு ஆரம்பமாகின்றது. அதாவது தேர்தல் பணிகளில் ஈடுபடவுள்ள அரச உத்தியோகத்தர்கள் அனைவரும்(முப்படையினர், பொலிசார் உட்பட) தமக்கெனக் குறிப்பிடப்பட்ட பிரத்தியேக வாக்களிப்பு மையங்களில், பொதுத்தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட நாளுக்கு முன்னரே வாக்களிப்பர். இந்த வாக்குகள் சேகரிக்கப்பட்டு, சீல் செய்யப்படும். பின்னர் தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் போது, தபால் மூல வாக்குகளும் தனியாக எண்ணப்பட்டு, மொத்த வாக்குகளோடு சேர்க்கப்படும். இவ்விதம் தபால் வாக்களிப்புக்கென இந்தமுறை 7 லட்சத்து 53 ஆயிரத்து 37 பேர் விண்ணப்பித்தபோதும், அவர்களில் 47 ஆயிரத்து 430 பேரின் விண்ணப்பங்கள், அவற்றில் உள்ள குறைபாடுகள் காரணமாக நிராகரிக்கப்பட்டுள்ளன. இதனால் 7லட்சத்து 4ஆயிரத்து 85 பேர் இம்முறை தபால் வாக்களிப்பில் ஈடுபட முடியும்.

அரச பணியாளர்கள் என்றாலே படித்தவர்கள் என்று தான் சமூகத்தில் அடையாளப்படுத்தப்படுவர். அதுவும் தேர்தல் பணியில் ஈடுபடும் உத்தியோகத்தர் என்றால் அனுபவமும், கல்விப்புலமையும் இன்னும் அதிகமிருக்கும். அத்தோடு அவர்கள் தான் வாக்களிக்க வரும் சாதாரணமக்களை தேர்தல் தினத்தன்று சரியாக வழிநடத்தி, வாக்களிப்பு சீராக நடைபெறச் செய்து, இந்த நாட்டின் ஜனநாயகத்தைக் காக்க துணைநிற்கப் போகின்றனர். அந்தளவு பொறுப்புமிக்கவர்களில் 47 ஆயிரத்து 430 பேரின் விண்ணப்பங்கள் குறைபாடு களால் நிராகரிக்கப்பட்டுள்ளதென்பது, சாதாரணமாகக் கடந்து போகக் கூடிய ஒன்றல்ல. ஒரு விண்ணப்பத்தைக் கூடச் சரியாகப் பூர்த்தி செய்யமுடியாத இந்த 47 ஆயிரத்து 430 பேரைப் போல , சரியாக வாக்களிக்க முடியாத அல்லது தெரியாத அரச உத்தியோகத்தர்களும் இருக்கவே செய்கின்றனர். அப்படியானவர்களால் எப்படி சரியாக தேர்தலை நடத்தும் பொறுப்பைக் கொடுக்க முடியும் என்ற சந்தேகம் சாதாரண பொதுமக்களுக்கு வருவது சகஜமே.

ஆனால் உண்மையில், இப்படி குறைபாடுடைய விண்ணப்பங்களை அனுப்புதல் என்பது கவனக்குறைவாலும் நிகழக்கூடும். ஏனெனில் புதிதாக இம்முறையே அஞ்சல் வாக்களிப்புக்குத் தகுதிபெற்றவர்கள் விண்ணப்பத்தில் உள்ள சில வார்த்தைப் பிரயோகங்களை சரிவர விளங்கிக் கொள்ளாமல் தவறாகவும் பூர்த்தி செய்திருக்கலாம்.அதனால் குறித்த விண்ணப்பங்களைக் கையேற்கும் திணைக்களங்கள் ஒருமுறை அவற்றை மீளாய்வு செய்து, குறித்த உத்தியோகத்தர்களுக்கு தவறைச் சுட்டிக்காட்டி நிவர்த்திசெய்து அனுப்பினால் இந்தளவு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருக்காது. ஆனால் நிராகரிக்கப்பட்ட வாக்குகளில் அஞ்சல் வாக்குகளும் இணைதல் என்பது கொஞ்சம் அபத்தமே.

கடந்தகாலங்களில் அஞ்சல் வாக்காளர்களில் குறிப்பிடத்தக்க வீதமானோரின் வாக்குகள் நிராகரிக்கப்பட்ட வாக்குகளாக இருந்துள்ளன. இவ்வாறு அஞ்சல் வாக்குகள் வீண டிக்கப்பட்டமைக்குக் காரணம், கவனக்குறைவு அல்லது அனுபவமின்மை என்று சொல்லிவிட்டுத் தப்பிவிட முடியாது. வாக்களித்து என்ன நடக்கப் போகிறது என்ற சலிப்பில் பலர் தமது வாக்கை வேண்டுமென்றெ செல்லாத வாக்காக மாற்றுவதுண்டு. இதனாலேயே குறிப்பிடத்தக்க வீதமான அஞ்சல் வாக்குகள் நிராகரிக்கப்பட்ட வாக்குகள் என்ற வகைக்குள் ஒதுக்கி விடப்படும் நிலை ஏற்படுகின்றது. ஆனால் ஒற்றை வாக்குக்கூட ஒருவிரல் புரட்சியை நிகழ்த்தி, ஆட்சியையே மாற்றவும் கூடும். அந்த உண்மையை அஞ்சல் வாக்காளர்கள் மட்டுமல்லாது அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.நாம் வாக்களித்து எந்தப் பயனுமில்லையே என்று சிந்திக்காமல், யாருக்கு வாக்களித்தால் பலமாகும் என்று தெளியவேண்டும். எங்கள் உரிமைக்குரலை யார் உரக்கச் சொன்னார்களோ, யார் சொல்வார்களோ, அவர்களை இனம் கண்டு , வாக்குகளை வீணாக்காமல் சரியாக வாக்களிப்பதே நாட்டுக்கும், வீட்டுக்கும் பலம்.

# தேர்தல் பிரசாரங்களில் படையினர் என்பது பொய்

### அமைச்சர் ரமேஷ் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 13



**வடக்கு மாகாணத்தில் தேர்தல் பிரசாரங்களில் படையினர் ஈடுபடுகின்றனர் என்றும், படையினர் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தேர்தல் செயற்பாடுகளில் தலையீடுகளைச் செய்கின்றனர் என்றும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பான அப்பட்டமான பொய்யாகும்.**

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளார் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கிவரும் நிலையில் வடக்கில் தமிழ்த் தேசியக் கட்சிகள் முன்னெடுத்துவரும் தேர்தல் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டை ஏற்படுத்தும் வகையிலும், மக்களை அச்சுறுத்தும் வகையிலும் படையினரும், புலனாய்வாளர்களும் செயற்பட்டு வருகின்றனர் என்று கட்சிகள் சிலவற்றின் தலைவர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தனர்.

அது மட்டுமன்றி, வழமைக்கு மாறாக முக்கிய வீதிகளில் விசேட சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு தற்போது அவை நிரந்தரமாக்கப்பட்டு பொதுமக்கள், வேட்பாளர்களை இலக்கு வைத்து சோதனைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் குற்றம் சாட்டப்படுகின்றது.

அதேநேரம், தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினரான பேராசிரியர் ரட்ணஜீவன் கூலும் தேர்தல் வாக்கெடுப்புக்கு முன்னதாகவே வடக்கில் படையினரின் பிரசன்னம் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. எனவும் அமைச்சர் பத்திரன் தெரிவித்துள்ளார்

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வடக்கு மாகாணத்தில் படையினர், புலனாய்வாளர்கள் எவ்விதமான முறையற்ற செயற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை. தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுகின்றார்கள், தேர்தல் செயற்பாடுகளுக்கு குந்தகம் விளைவிக்கின்றார்கள் என்று கூறுவது அப்பட்டமான பொய்யாகும்.

தற்போதைய சூழலில் வடக்கு கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் சட்ட விரோதச் செயற்பாடுகளை முழுமையாக கட்டப்படுத்துவதை இலக்காகக் கொண்டு அரசால் சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் விசேட சோதனைச் சாவடிகளும், ரோந்து நடவடிக்கைளும் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தச் செயற்பாடுகள் வடக்கு மாகாணத்தில் மட்டுமன்றி தென் மாகாணத்திலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முக்கியமாக வடக்கில் போதைப்பொருள் கடத்தல்களைக் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. சமூக விரோத குற்றச்செயல்களையும் கட்டப்படுத்த வேண்டியுள்ளது. அந்தச் செயற்பாடுகளில் பொலிஸாருடன் இணைந்து படையினரும் ஒத்துழைப்புக்களை வழங்குகின்றனர்-என்றார். (க)

## தேர்தல் தொடர்பில் 2,781 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 13

தேர்தல் ஆணைக்குழுவுக்கு பொதுத்தேர்தல் தொடர்பிலான 2 ஆயிரத்து 781 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவற்றில் 700 முறைப்பாடுகள் தேசிய தேர்தல்கள் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

மாவட்ட தேர்தல்கள் முறைப்பாட்டு மத்திய நிலையங்களுக்கு 2 ஆயிரத்து 81 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அத்துடன் தேர்தல்கள் தொடர்பிலான முறைபாடுகளை 0112 88 6179, 0112 88 64 21 அல்லது 0112 88 61 17 ஆகிய தொலைப்பேசி இலக்கங்கள் ஊடாக பதிவு செய்ய முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேவேளை பொதுத்தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை 0112 88 65 51 அல்லது 0112 88 6552 ஆகிய தொலைநகல் இலக்கங்களின் ஊடாகவும் அனுப்பி வைக்க முடியும்என்றதேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (க)

## இரண்டாவது அலைக்கு இடம் வழங்கமாட்டோம்

### கமால் குணரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

இலங்கையில் இரண்டாம் கட்ட கொரோனா அச்சுறுத்தல் ஏற்படுவதற்கு ஒருபோதும் நாம் இடமளிக்கமாட்டோமென பாதுகாப்புச் செயலர் கமால் குணரத்ன தெரிவித்தார்.

கொக்காவில் பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு பாதுகாப்பு அமைச்சிடம் பல்வேறு திட்டங்கள் உள்ளன. அந்த வகையில் அனைத்து மக்களும் அச்சமின்றி சந்தோசமாக வாழக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப் படும் - என்றார். (ம)

## ஒன்பது பேர் கைது

யாழ்.மாவட்ட நீதிமன்றங்களால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 9 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட சந்தேக நபர்களைக் கைது செய்யுமாறு மாவட்ட நீதிமன்றங்களால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட நிலையில் இவர்கள் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த நான்கு பேரும், கோப்பாய் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த இரண்டு பேரும், சாவகச்சேரி பொலிஸ் பிரிவைச் சேர்ந்த இரண்டு பேரும், கொடிகாமம் பொலிஸ் பிரிவில் ஒருவருமாக 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (க-159)

# சிங்களக் கட்சிகளில் போட்டியிடுகின்ற கொரோனாக்களை தனிமைப்படுத்தவும்

## மக்களிடம் கோருகின்றார் சுகாஸ்

**கொடிகாமம், ஜூலை 13**

**கோடிகளைப் பெற்றுக்கொண்டு தமிழ் மக்களை வாக்குகளுக்காக விற்கும் ஈனப்பிறவிகள் தான் அங்கயனும் விஜயகலாவும் என்று சாடியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கே.சுகாஸ், சிங்கள கட்சிகளைச் சேர்ந்த இவர்கள் கொரோனா போன்றவர்கள். அவர்களை தனிமைப்படுத்தாவிட்டால் சதிவலையில் மாட்டிவிடுவோம் என்றும் தெரிவித்துள்ளார்.**

கொடிகாமம் தாவளை இயற்றாலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல சிங்களக் கட்சிகள் எங்கள் மண்ணுக்கு வந்துள்ளன. அங்கயன் சிங்களக் கட்சியில் கையைக் காட்டிக் கொண்டு வருகிறார், வீணை வாசிக்கி றார் டக்ளஸ் தேவானந்தா, யானையில் வருகிறா கலாக்கா (விஜயகலா) இவர்கள் எல்லாம் சிங்களக் கட்சிகளின் வேட்பா ளர்கள். சிங்களக் கட்சிகளுக்கு எங்கள் மண்ணிலிருந்து ஒரு வாக்கும் விழக்கூடாது.

சிங்களவர்கள் பெரும்பான்மையாக இருக்கின்றார்கள். அவர்களின் பிரதேசத்தில் ஒரு தமிழ்க் கட்சி போட்டியிட முடியுமா? எங்கள் மண்ணில் மட்டும் சிங்கள கட்சிகளில் போட்டியிடும் தமிழர்கள் வெற்றி பெறுகிறார்கள். இது நாங்கள் விட்ட பிழை.

அவர்கள் எங்கள் மக்களை ஏமாற்றுகிறார்கள். எங்கள் மண்ணை சிங்கள மயமாக்குவதற்கு முற்படுகின்றார்கள். இவர்கள் மிகவும் ஆபத்தான அரசியல் கொரோனாக்கள். கொரோனா வந்தவர்களை எப்படி தனிமைப்படுத்துவோமோ அதேமாதிரி சிங்களக் கட்சிகளையும் இந்த மண்ணைவிட்டு தனிமைப்படுத்த வேண்டும்.

எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அந்த வேலை வாய்ப்பு கிடைக்கும். 100 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்க 50 ஆயிரம் பேரிடம் பயோடேட்டா வாங்குகிறார்கள்.

அன்ரன் பாலசிங்கத்தைப் பற்றி கிளிநொச்சியில் ஒருவர் சொல்லியிருக்கிறார். அன்ரன் பாலசிங்கம் தேசத்தின் குரல்.

அன்ரன் பாலசிங்கம் என்ற புலியை சுமந்திரன் என்ற எலியோட ஒரு நரி ஒப்பிட்டிருக்கிறது.

தமிழீழ விடுதலை புலிகளின் தியாகத்தை கொச்சைப்படுத்தி, மாவீரர் குடும்பங்களை கவலைப்படுத்தி, அங்கவீனமுற்ற முன்னாள் போராளிகளை வேதனைப்படுத்தி தமிழ்மக்களுடைய அடையாளத்தை அழிக்கிற நிகழ்ச்சிகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதை நாம் தடுத்து மண்ணையும் மக்களையும் காப்பதற்கு உங்களிடம் ஒரு சந்தர்ப்பத்தை வேண்டி நிற்கிறோம் - என்றார். (த-159)

# தமிழர்கள் முட்டாள்கள் என்பதையே சுமந்திரனின் கருத்து காட்டுகிறது

## விளாசுகின்றார் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஜூலை 13

சுமந்திரன் தமிழ் மக்களை எந்த அளவுக்கு முட்டாள்களாகப் பார்க்கின்றார் என்பதையே அவர் கூறிவரும் கருத்துக்கள் எடுத்துக்காட்டுகின்றன என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பரப்புரைக் கூட்டம் புத்தூரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசிடம் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்ளப்போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் அறிவித்துள்ளார் என்று வெளிவந்துள்ள ஊடகச்செய்திகள் எனக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அவர் மிகவும் தெட்டத்தெளிவாக இதனைச் சொல்லியிருக்கின்றார்.

அத்துடன் தாம் அமைச்சுப் பதவிகளைப் பெறுவதற்கு தமிழ் மக்கள் தமக்கு ஆணை தரவேண்டும் என்று துணிந்து வெட்கம் இல்லா மல் கேட்டிருக்கின்றார். தமிழ் மக்களை சுமந்திரன் எந்த அளவுக்கு முட்டாள்கள் என்றும் சுயகௌரவம் இல்லாதவர்கள் என்றும் ஏமாளிகள் என்றும், நினைக்கின்றார் என்பதையே அவரது இந்தக் கருத்து எடுத்துக் காட்டுகின்றது.

அத்துடன் முன்னைய ஆட்சியிலும் அமைச்சுப் பதவிகளை பெற்றிருந்திருக்க வேண்டும் என்ற கருத்தையும் அவர் கூறி இருக்கின்றார். இது எந்தளவுக்கு சரணாகதி அரசியல் சிந்தனைக்குள்ளும் சலுகை அரசியல் சிந்தனைக்குள்ளும் கடந்த காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு செயற்பட்டிருக்கின்றது என்பதைத் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

அவர் அபிவிருத்திக்காக அமைச்சுப் பதவிகளைப் பெறவேண்டும்என்றுகூறுவது வெறும் முதலைக் கண்ணீர் வடிப்பதாகும்.

அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றமைக்காக ஜி. ஜி பொன்னம்பலம் பின்னர் வருந்தியதாகத் தெரிவிக்கும் சுமந்திரன், தாங்கள் அமைச்சுப் பதவிகளைப் பெறப்போகின்றோம் என்று கூறுகின்றார்.

கடந்த காலங்களில் டக்ளஸ் தேவானந்தா, கருணா, பிள்ளையான் போன்றவர்களும் அரசுடன் இணைந்து அமைச்சர்களாக இருந்தார்கள். ஆனால் அவர்களால் எதைச் சாதிக்க முடிந்தது? சுமந்திரன் மட்டும் அரசில் அமைச்சரானால் மக்களின் அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்கப் போகின்றாரா? டக்ளஸ் தேவானந்தா, கருணா, பிள்ளையான் ஆகியோருக்கும் சுமந்திரனுக்கும் இடையில் வித்தியாசம் எதுவும் இல்லை என்று இப்போது ஆகிவிட்டது.

சலுகைகளுக்கும், பதவிகளுக்கும், சரணாகதி அரசியலுக்கும் எமது மக்களைமூளைச்சலவை செய்ய முயற்சிக்கின்றார் சுமந்திரன்.

இவர்கள் அமைச்சர்களாக வந்தால் தமது அமைச்சுக்களைக் காப்பாற்ற மௌன மடந்தைகளாக இருப்பார்கள். தமிழரின் தொகை கூனிக் குறுகிவிடும் - என்றார். (த)

# விசாரணை கோரியதால்தான் உறுப்புரிமை பற்றிய வழக்கு

## கூறுகின்றார் மணிவண்ணன்

யாழ்ப்பாண மாநகர சபையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை கோரியமையால்தான் என்மீதான உறுப்புரிமை தொடர்பில் சுமந்திரன் எனக்கு எதிராக வழக்காடி வருகின்றார் என்று தெரிவித்துள்ளார், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளருமான வி.மணிவண்ணன். ஈ.பி.டி.பி.யினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்றும் அவர் சாடியுள்ளார்.

யாழ்ப்பாணம் நாவாந்துறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஈ.பி.டி.பி. கட்சியை கள்ளர்கள், கடத்தல்காரர்கள் என்று கடுமையாகச் சாடி பரப்புரைகளை மேற்கொண்டிருந்தனர். பின்னர் தேர்தல் முடிவடைந்த பின்னர் யாழ்ப்பாண மாநகர சபையில் ஆட்சி அமைப்பதற்காக ஈ.பி.டி.பி.யிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரணாகதி அடைந்தது. இதற்கு பிரதியுபகாரமாக யாழ்ப்பாணம் மாநகர சபை ஈ.பி.டி.பி.யின் ஆட்சியில் இருந்தபோது இடம்பெற்றதாகக்கூறப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணைகளை மூடி மறைப்பதற்கும் அதில் ஈடுபட்டவர்களை பாதுகாப்பதற்கும் உதவ கூட்டமைப்பினர் இணங்கியுள்ளனர்.

நான் மாநகரசபையில் நான்கு மாதங்கள் உறுப்பினராக இருந்தேன். மாநகர சபையின் கடந்த ஆட்சியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் முறைகேடுகள் தொடர்பில் விரிவான விசாரணைகளும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன். அதிலும் குறிப்பாக புல்லுக்குளம் கட்டடம் கட்டப்பட்டதில் முறைகேடுகள் உள்ளன என்பதைச் சுட்டிக்காட்டி சபையில் பேசியிருந்தேன். இவ்வாறான நிலையில் இவற்றைத் தடுத்து நிறுத்தவும் ஈ.பி.டி.பி.யினரை காப்பாற்றுவதற்காககவுமே என் மீது உறுப்பினர் உரிமை தொடர்பான வழக்கு தொடரப்பட்டது.

- என்றார். (த-20)

# பிரச்சினைகளைத் தீர்க்க எனக்கு வாக்களிக்கவும்

## கோருகின்றார் சிவசக்தி ஆனந்தன்

வவுனியா, ஜூலை 13

இடமாற்றப் பிரச்சினைகள், சம்பள முரண்பாடுகள் மற்றும் காணியற்ற அரச ஊழியர்களுக்கு குடியி ருப்புக்கான காணிகளைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற பொது மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வேன் என்று சிவசகத்தி ஆனந்தன் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

உங்களுடைய ஒத்துழைப்பின்றி மாவட்டத்தின் எந்தவொரு அபிவிருத்தி திட்டங்களையும் முன்னெடுக்க முடியாது. தேர்தலில் கடந்த காலத்தில் உங்களால் வழங்கப்பட்ட ஆதரவைப் போன்று, நடைபெறவுள்ள தேர்தலிலும் எனக்கு வாக்களிப்பதன் ஊடாக கடந்த காலத்தில் உங்களுடன் இணைந்து பணியாற்றியமை போன்று தொடர்ந்தும் பணியாற்றுவேன். - என்று சிவசகத்தி ஆனந்தன் குறிப்பிட்டுள்ளார். (த)

# தேர்தலின் பின்னர் விக்கி தரப்பு கூட்டமைப்புடன் இணையும்

## முன்னணியின் தலைவர் கூறுகின்றார்

வவுனியா, ஜூலை 13

மாற்று அணி என்று கூறிக் கொண்டு இருக்கின்ற விக்னேஸ்வர னின் கட்சியினர்கூட, தேர்தல் முடிந்த பின்னர் நாடாளுமன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படவுள்ளோம் என்று கூறியிருக்கின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னென்ன தீர்மானங்களை எடுக்கின்றதோ அவற்றுக்கு விக்னேஸ்வரன் ஒத்துழைப்பு வழங்கி இணைந்து செயற்படுவார் என்று எழுத்து மூலமாகக் கூறிவருகின்றார்.

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

அவருடைய கட்சிக்கென வவுனியாவில் தேர்தல் பரப்புரை அலுவலகத்தை திறந்துவைத்து உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒட்டுமொத்த இவ்வுலகிற்கு பொறுப்புக்கூறலை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றோம் என தெரிவிக்கின்ற எங்கள் பிரதிநிதிகள் என சொல்பவர்கள் யாரிடம் பொறுப்புக் கூறலை எதிர்பார்க்கின்றார்களோ அந்தத் தரப்புடன் கூட்டுச்சேர்ந்து ஆட்சி அமைத்து அமைச்சுப் பதவிகளைப் பெறுவதானது, தமிழ் மக்களுடைய எண்ணங்களை உதாசீனம் செய்வது மட்டுமல்லாது பச்சைத்துரோகம் செய்வதற்கு சமமான செயல் என்பதை மக்கள் விளங்கிக்கொள்வார்கள். என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(த-110)

சட்ட விரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த

# வடக்கில் விசேட திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

**வடக்கு கடற்பரப்பு ஊடாக நாட்டுக்குள் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. அவற்றைத் தடுக்கும் முகமாக வடக்கு கடலோரத்தை மையப்படுத்தி விசேட திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

இவ்வாறு கடற்படை ஊடகப் பேச்சாளர் லெப்டினன்ட் கொமாண்டர் இசுருசூரியபண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'வடக்கு கடல்பரப்பில் இடம்பெறும்குற்றங்களானபோதைப் பொருள் கடத்தல், மனிதக் கடத்தல், பீடி இலை கடத்தல், தங்கக்கடத்தல் போன்ற சட்டவிரோத செயற்பாடுகளுடன் மீனவர்கள் தொடர்புபடுகின்றமை விசாரணை களில் தெரியவந்துள்ளது. குறித்த சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவோர் மூலம் நாட்டுக்குள் குறிப்பாக வடக்கில் கொரோனாப் பரவல் ஏற்பட வாய்ப்புள்ளமையைக் கருத்தில் கொண்டு அது தொடர்பில் அறிவறுத்தல் நடவடிக்கைகளையும் முன் னெடுத்துள்ளதாக அவர் கூறினார்.

எனவே, மீனவர்களில் சிலர் எமக்கு ஏற்கனவே இக் கடத்தல் சம்பவங்கள் தொடர்பில் தக வல்களைத் தரும் நிலையில், அவர்களிடமிருந்து இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்த தகவல்கலைப் பெற்றுக்கொள்ள விசேட திட்டமொன்று வகுக்கப்பட்டு, வடக்கில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது எனவும் கடற்படை ஊடகப் பேச்சாளர் லெப்டினன் கொமாண்டர் இசுரு சூரிய பண்டார தெரிவித்துள்ளார். (ரி3)



## 5,000 கிலோ நெத்தலி கரைவலையில் சிக்கியது

அம்பாறை, ஜூலை 13

அம்பாறையின் கல்முனைக் கடற்கரைப் பகுதியில், சுமார் 5 ஆயிரம் கிலோவுக்கும் அதிக நிறையுடைய நெத்தலி மீன்கள் நேற்று கரைவலையில் பிடிபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த கடற்கரைப் பகுதியில் அண்மைய நாள்களாக அதிகளவான நெத்தலி மீன்கள் பிடிக்கப்பட்டு வருவதாக கடற்தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கடற்தொழிலாளர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போது அதிகளவான மீன்கள் பிடிபடக் கூடிய காலமாக இல்லாதபோதும் நெத்தலி மீன்கள் அதிகமாக பிடிபடுவதால் விலையும் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. கடற்கரையிலேயே கருவாடும் உற்பத்தி செய்யப்படுவதுடன் கல்முனை பகுதியில் இருந்து கொழும்புக்கும் மீன்கள் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் பல மாதங்களுக்கு பின்னர் இன்று இவ்வாறு அதிகளவான மீன்கள் பிடி பட்டுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளனர். (ரி2)



## பருத்தித்துறையில் பி.சி.ஆர். பரிசோதனைகள்

பருத்தித்துறை, ஜூலை 13

சமூகமட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றைக் கண்காணிப்பதற்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் அண்மையில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட் பட்ட வல்வெட்டித்துறை, இன்பர்சிட்டி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த பரிசோதனை முடிவுகளின்படி எவருக்கும் தொற்று ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை வடக்கு மாகாணத்தில் சமூகமட்டத்தில் தொற்று உள்ளதா என அறிய தொடர்ந்து பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ரி3



## சுற்றுச்சூழலை சுத்தப்படுத்தும் இராணுவத்தினர்

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாணம் மாநகரில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றி சுற்றுச்சூழலை சுத்தப்படுத்தும் பணி நேற்று காலை 7 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் வணிகசூரிய தலைமையில் இராணுவம், பொலிஸ் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் இணைந்து யாழ்ப்பாணம் மாநகரை தூய்மைப்படுத்தும் பணி முன்னெடுக்கப்படுகிறது. இந்தப் பணி நேற்று முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் கோட்டை முன்பாக இடம்பெறும் பிரதான நிகழ்வுடன் நிறைவுபெறவுள்ளது.

யாழ். மாநகரில் காணப்படும் பிளாஸ்டிக், பொலித்தீன் கழிவுப்பொருள்களை அகற்றி நகரைச் சுத்தப்படுத்தும் நோக்குடன் இந்தப் பணி சுழற்சிமுறையில் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

## மந்திகை மருத்துவமனை சிற்றுண்டிச்சாலையில் பாவனைக்கு உதவாத இடியப்பத்தட்டுக்கள்

பருத்தித்துறை ஜூலை 13

பிளாஸ்ரிக் பொருள்களின் பாவனை சுகாதாரப் பகுதியினரால் தடை செய்யப்பட்டுள்ள நிலையில், பருத்தித்துறை மந்திகை ஆதார மருத்துவமனை சிற்றுண்டிச்சாலையில் பாவனைக்குதவாத நூற்றுக்கணக்கான பிளாஸ்ரிக் இடியப்பத்தட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பருத்தித்துறைப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குழுவினால் மந்திகை புலோலிப் பகுதிகளிலுள்ள



உணவு கையாளும் நிலையங்கள் நேற்று முன்தினம் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. குறித்த பரிசோதனை நடவடிக்கையின்போதே பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைச் சிற்றுண்டிச்சாலையில் இடியப்பம் அவிப்பதற்காகப் பயன்படுத்தப் பட்டுக்கொண்டிருந்த பிளாஸ்டிக் இடியப்பத் தட்டுக்கள் கைப்பற்றப்பட்டதோடு, இனங்காணப்பட்ட சுகாதாரக் குறைபாடுகளுக்காகச் சட்ட நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ரி3-9)

## பேருந்து சாரதிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை

கம்பஹா, ஜூலை 13

பயணிகள் பேருந்து சாரதிகளுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன் முதல் கட்டமாக கம்பஹாவில் தெரிவுசெய்யப்பட்ட தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து சாரதிகளுக்கு கம்பஹா பொலிஸாரின் ஏற்பாட்டில் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ரி3)

## உரிய நியமங்களைப் பின்பற்றாத நிறுவனங்கள் மீது வழக்குப் பதிவு

கொழும்பு, ஜூலை 13

உரிய நியமங்களைப் பின்பற்றாமல் லஞ்சீற் வகை களைத் தயாரித்த இரு நிறுவனங்களுக்கு எதிராக மத்திய சுற்றாடல் அதிகார சபை வழக்குப் பதிவு செய்துள்ளது.

இவ்வாறு, சட்டத்துக்கு முரணாக செயற்படும் மொத்த விற்பனை நிலையங்களின் விநியோகம் தொடர்பான தேடுதல்களை மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஆரம்பித்துள்ளது என்று அதிகாரசபையின் களுத்துறை மாவட்டப் பிரதானி பிரதீப் களுஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

அதன்படி இன்றைய தினம் கம்பஹா, திஹாரிய, கனேமுல்ல, கிரிபத்கொட ஆகிய பிரதேசங்களிலேயே இவ்வாறு தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், கனேமுல்லவிலுள்ள 2 லஞ்சீட் தொழிற்சாலைகளுக்கும், 4 மொத்த விற்பனை நிலையங்களுக்கும் எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி2)

## போலி நாணயத்தாள்களுடன் மூவர் கைது!

கொழும்பு, ஜூலை 13

குருவிட்ட பகுதியில் போலி நாணயத்தாள்கள் வைத்திருந்த மூவரை பொலி ஸார் கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களிமிருந்து 5000 ரூபா நாணயத்தாள்கள் 21 உம், 500 ரூபா நாணயத்தாள்கள் 34 உம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

போலி நாணயத்தாள்கள் தொடர்பான புழக்கங்கள் தொடர்பில் முறையிட 0112422176 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ரி1)

# 185 இலங்கையர்கள் நாட்டை வந்தடைவு

கொழும்பு, ஜூலை 13

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மாலைதீவில் சிக்கித் தவித்த 185 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர். அவர்கள் அனைவரும் நேற்று காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். அவர்களுக்கு விமான நிலையத்தில் வைத்து பி.சிஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. (ரி1)

# பிளாஸ்ரிக் பயன்பாட்டை ஒழிக்க மக்கள் ஒத்துழைக்கவேண்டும்

## அரசாங்க அதிபர் வேண்டுகோள்



**யாழ்ப்பாணம், ஜூலை 13**

**பொருளாதாரத்தில் பின்னடைவை ஏற்படுத்தும் பிளாஸ்ரிக் பொருட்களின் பயன்பாட்டை தவிர்ப்பதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

யாழ். மாநகரில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றி சுற்றுச்சூழலை சுத்தப்படுத்தும் பணி இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதன் தொடர்ச்சியாக யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் நேற்று இடம்பெற்ற விழிப்புணர்வுச் செயற்பாட்டில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

பிளாஸ்ரிக் பொருட்களை, பயன்படுத்துவது மற்றும் மீள்சுழற்சி, மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை யாழ்.மாவட்ட கட்டளைத் தலைமையகம் முன்னெடுத்துள்ளது.

இந்த விழிப்புணர்வு எமது மக்களிடையே சென்றடைய வேண்டும். எமது சமூக மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றுவதற்கும், பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையைத் தடுப்பதற்கும், மக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது சமூகத்தை நோய்களிலும், தொற்றுக்களில் இருந்தும் பாதுகாப்பதற்கு பிளாஸ்ரிக் பொருட்களை தவிர்ப்பது இன்றியமையாதது. எனவே, பொதுமக்கள் பிளாஸ்ரிக் பொருட்களை பாவிப்பதில் விழிப்புணர்வு பெற வேண்டுமென்பதுடன், எமது சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கும் ஒத்துழைப்புத் தர வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுக்கிறேன் எனத் தெரிவித்துள்ளார். (ரி1-106)

# கந்தகாடு சென்று வந்தோர் கம்பஹாவிலும்

கம்பஹா, ஜூலை 13

கம்பஹா மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும், கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இருப்பவர்களை பார்வையிடச் சென்ற பலர் இருக்கிறார்கள் என்று கட்டுநாயக்கப் பிரதேசத்துக்கு பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

மேலும், கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திற்கு சென்று திரும்பியவர்களின் முகவரிகள் வெளியிடப்பட்டுள்ளதுடன் அவர்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தொற்றாளர்கள் அல்லர், ஆனாலும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இந்த அறிவிப்பு கம்பஹா மாவட்டத்திலுள்ள அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி2)

### நல்லூர் பிரதேச சபையில்

# அளத்தல் கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 12

நல்லூர் பிரதேச சபைககு உட்பட்ட வியாபார நிலையங்களின் நிறுத்தல் அளத்தல் கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகள் எதிர்வரும் வாரத்தில் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 13ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை இம் முத்திரையிடும் பணிகள் ஆடியபாதம் வீதியில் உள்ள சபையின் உப அலுவலகத்தில் நடைபெறும். வியாபார நிலையங்கள் மற்றும் சந்தை வியா பாரிகள் குறித்தநாளில் தமது நிறுத்தல் அளத்தல் கருவிகளுக்கு முத்திரையிடலாம் எனவும் சபையின் தவிசாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி3-17)

# அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் 31ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 13

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகமும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான அமரர் அ.அமிர்தலிங்கம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் வெ.யோகேஸ்வரன் ஆகியோரின் 31வது நினைவு தின நிகழ்வு யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெறவுள்ளது. மேற்படி நினைவுதின நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுவார் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1989 ஜூன் மாதம் 13ஆம் திகதியன்று பேச்சுவார்த்தை நடத்துவதாக வந்த ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் கலந்துரையாடல் முடிந்தபின் தேநீர் அருந்திவிட்டு "போய்வருகிறோம்" என்று கூறிவிட்டு அருகில் இருந்த குறித்த இருவரையும் சுட்டுக் கொன்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி 3)

# யாழ்.பிரதேச செயலகத்துக்கு பிரதேச கீதம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தினால், செயலகத்துக்கான பிரதேச கீதம் ஒன்றை உருவாக்குதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை யால் பாடலாக்கங்கள் கோரப்படுகின்றன.

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் சிறப்புக்கள், தொன்மைகள், பண்பாட்டு அம்சங்கள் மற்றும் இயற்கை வளங்கள் ஆகியவற்றை பிரதிபலிப்பதாக இப் பிரதேச கீதம் அமைய வேண்டும்.

கிடைக்கப்பெறும் பாடலாக்கங்களிலிருந்து தெரிவுக்குழுவின் பரிசீலனையின் பின்னர் சிறந்த பாடலாக்கம் தெரிவு செய்யப்பட்டு பிரதேச செயலக கீதம் உருவாக்கப்படும் தமது ஆக்கத்தை வழங்க விரும்பு வோர் எதிர்வரும் ஓகஸ்ட் 14 இற்கு முன்னர் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளர் எஸ். சுதர்சன் தெரிவித்துள்ளார். (ரி2)

# அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்வு மூவர் கைது

கிளிநொச்சி, ஜூலை 13

அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் தருமபுரம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். குறித்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை புளியம் பொக்கணை - கல்லாறு பகுதியில் இடம்பெற்றது. இதன்போது மணல் ஏற்றுவதற்காக பயன்படுத்தப்பட்ட டிப்பர்கள் மூன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. கைதானவர்கள் பொலிஸ் பிணையில் விடுதலைசெய்யப் பட்டுள்ளதுடன் எதிர்வரும் 16ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தப்பட வுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3-113)



# மூதாட்டியிடம் கொள்ளை; சந்தேகத்தில் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 13

தனிமையில் வசித்த மூதாட்டியை அச்சுறுத்தி நகை, பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டனர் என்ற சந்தேகத்தில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் ஏழாலையைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

பிள்ளைகள் வெளிநாட்டில் உள்ளதால் செல்வச்சந்நிதி ஆலய வளாகத்தில் உள்ள வீடு ஒன்றில் மூதாட்டி ஒருவர் தனிமையில் வாழ்ந்து வருகின்றார். கடந்த புதன்கிழமை மேற்படி மூதாட்டி தொலைபேசியில் உரையாடியவாறு வீட்டிலிருந்து வெளியில் வந்துள்ளார். இதன்போது வீட்டு வளவினுள் நுழைந்த கொள்ளையர்கள் மூதாட்டியை வீட்டுக்குள்ளே இழுத்துச் சென்று அச்சுறுத்தி நகைகள், பெருந்தொகைப் பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மூதாட்டி இது தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப் பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையைத் தொடர்ந்தே மேற்படி மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர் . (ப-ம-25)

# போதைப்பொருள்களுடன் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 13

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மடத்தடி பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை போதைப்பொருள்களுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். வீதி ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த நெல்லியடி பொலிஸார் ஒரே மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவரைக் கைதுசெய்து விசாரணை மேற்கொண்டபோதே குறித்த கைது இடம்பெற்றுள்ளது.

இவர்களிடமிருந்து 15 கிராம் கஞ்சா மற்றும் 50 மில்லிகிராம் ஹெரோய்ன் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் குறித்த சந்தேக நபர்கள் மூவரும் பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3-25)

# மீண்டும் கொரோனா அரசே முழுக்காரணம்

## இலங்கை மருத்துவ சம்மேளனம் சாடல்

**கொழும்பு, ஜூலை 13**

**நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் ஏற்பட்டமைக்கு அரசாங்கமே காரணம் என்று இலங்கை மருத்துவ சம்மேளனம் குற்றம் சுமத்தியுள்ளது.**

கொரோனா கட்டுப்பாட்டுத் திட்டங்களில் தளர்வுகளை ஏற்படுத்தியமை, பொது ஒன்று கூடல்களுக்கு அனுமதித்தமை, பொதுப் போக்குவரத்துக்கு அனுமதியளித்தமை என்பவையே இதற்கான காரணங்கள் என்று இலங்கை மருத்துவ சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

முக்கிய கட்டுப்பாட்டு நட வடிக்கைகள் போதுமான அளவில் பயன்படுத்தப்படுவதில்லை. அரசாங்கத்தால் அவை கண்காணிக்கப்படவில்லை. மிகவும் துரதிஷ்டவசமாக, எடுக்கப்பட்ட சில பிற்போக்குத்தனமான நடவடிக்கைகளால் இந்தச் சிக்கல் தோன்றியுள்ளது. இது உலகெங்கிலும் உள்ள பல நாடுகள் எதிர்கொள்ளும் பேரழிவு நிலைக்கு முழு நாட்டையும் இட்டுச்செல்லும் என்றும் இலங்கை மருத்துவ சம்மேளனம் எச்சரித்துள்ளது. (ரி1)





"தனிமை தவிர்ப்போம்" எனும் தொனிப் பொருளில் உடுவில் பிரதேச கலாசார பேரவையால் நடத்தப்பட்ட மாதாந்த கலைஞர் ஒன்று கூடல் கடந்த 2ஆம் திகதி பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் ,பிரதேச செயலாளர் தவச்செல்வம் முகுந்தன் தலைமையில் நடைபெற்றது. கலைஞர்களை ஒன்றுகூட்டி அவர்களின் அனுபவப் பகிர்வாக நிகழ்த்தப்பட்ட குறித்த நிகழ்வில் கோப்பாய் சிவம் மற்றும் கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

# யாழில் 52 கிலோ கேரளக் கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 13

யாழ்ப்பாணம் பளைவேம்படிப் பகுதியில் ஒரு தொகை கேரள கஞ்சா நேற்றுமுன்தினம் இரவு மீட்கப்பட்டுள்ளது. பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் காங்கேசன்துறை கடற்படையினர் இணைந்து மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போதே இக் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் குறித்த கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டோர் தப்பித்துச் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது 52.680 கிலோ கிராம் எடையுள்ள கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கடத்தலில் ஈடுபட்டவர்கள் தப்பியோடிய நிலையில் கடத்தலுக்கு பயன்படுத்திய மீன்பிடிப் படகொன்றையும் பறிமுதல் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ரி2)

# மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதன்படி நாளை 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ்.மாவட்டத்தில்** பருத்தித்துறை VM வீதி முதலாவது சந்தி, பருத்தித்துறை கல்லூரி வீதி, சாளம்பை, தம்பசிட்டி ஆகிய இடங்களிலும்,

**கிளிநொச்சி மாவட்டத்தில்** கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு, பெரியமடு, சின்னஅடம்பன், இராசபுரம் (லைக்காகிராமம்) ஆகிய இடங்களிலும், **வவுனியா மாவட்டத்தில்** தவசிக்குளம் கிராமம், பட்டாணிச்சூரிலிருந்து நெளுக்குளம்வரை,

பட்டாணிச்சூரிலிருந்து பம்பைமடு வரை, புளிதறித்த புளியங்குளம் கிராமம், செக்கட்டிப்புலவு, ஓமேகா லைன், வவுனியா தொழில்நுட்ப கல்லூரி. சுயன் அரிசி ஆலை, அஷ்வி அரிசி ஆலை, ஸ்ரீரங்கன் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, லீலா ஆலை, சந்திரிக்கா அரிசி ஆலை, வாரிக்குட்டியுர், கிறிஸ்தவகுளம், புளியங்குளம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் மாவட்டத்தில்** செம்மண்தீவு, நானாட்டான், பள்ளங்கோட்டை, எருவிட்டான், முருங்கன்பிட்டி, செம்மண்தீவு நெற்களஞ்சியம், டோன்பொஸ்கோ, சீனத் துறைமுகம், வங்காலை ஒரு பகுதி, முள்ளிப்பழம், தள்ளாடி, கடலேரி வீதி, சாந்திபுரம், Southbar, தரவன்கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

# ஜனாதிபதி ஆணைக்குழு அம்பாறைக்கு பயணம்

அம்பாறை, ஜூலை 13

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை களை மேற்கொள்ளும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு உறுப்பினர்கள் சிலர் அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களுக்குச் சென்றுள்ளனர்.

அந்தவகையில், இக் குழுவானது பயங்கரவாதி ஸஹ்ரான் ஹாசிமின் குழுவினர் தங்கிருந்த இடங்கள், ஆயுதங்கள் வெடிபொருட்களை மறைத்து வைத்திருந்த மற்றும் தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்ட இடங்கள் ஆகியவற்றுக்குச் சென்று இவ்வாறு பார்வையிடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (ரி2)

# இன்றைய நாள்

**மேடம்:** புதிதாக தொழில் தொடங்கும் முயற்சியில் வெற்றி உண்டு. சிலருக்கு திடீர் பணவரவு உண்டாகும். பிள்ளைகளால். பெருமை கிடைக்கும். சுப நிகழ்ச்சிகள் கைகூடும்.

**இடபம்:** வீடு வாங்க திட்டமிட்டவர்களுக்கு நல்ல செய்தி கிடைக்கும். அலுவலக ரீதியாக பயணங்கள் மேற்கொள்ள வேண்டி வரும். வியாபாரத்தில் வாய்ப்புகள் கிடைக்கும்.

**மிதுனம்:** எதிர்பாராத வகையில் சிறு செலவுகள் உண்டாகும். மேலதிகாரியுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். பெண்கள் பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர்.

**கடகம்:** வியாபாரிகளுக்குப் பழைய பாக்கிகள் அனைத்தும் வசூலாகும். அலுவலகத்தில் முன்னர் செய்த உழைப்பின் பலனை இப்போது பெற்று மகிழ்ச்சி அடைவீர்கள். குடும்பத்தில் இருந்த கருத்து வேறுபாடுகள் மறையும்.

**சிம்மம்:** எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் வளரும். பெண்கள் அக்கம் பக்கத்தினரிடம் வாக்குவாதங்கள் செய்ய வேண்டாம். நண் பர்களிடம் இருந்து விலகி இருப்பது நல்லது.

**கன்னி:** குடும்பத்தில் சிறிய மன வருத்தங்கள் வந்து நீங்கும். பிள்ளைகளின் மூலம் வீண் செலவுகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். தாய்மாமன் வழி உறவினர்களால் நன்மை கிடைக்கும்.

**துலாம்:** தகுதியான வேலை கிடைக்காமல் மன உளைச்சலில் இருந்தவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும்.

**விருச்சிகம்:** குடும்பச் செலவுகளை குறைப்பதன் மூலம் பணப் பிரச்னை தீரும். தொழிலில் சின்ன சின்ன மாற்றங்களை செய்தால் முன்னேற்றம் ஏற்படும்.

**தனுசு:** வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபத்தை பெறுவீர்கள். உத்தி யோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். பூர்வ சொத்து சம்மந்தப்பட்ட வகையில் ஆதாயம் உண்டு.

**மகரம்:** புதிய முயற்சிகளில்சில தடைக்கு பிறகு அனுகூலம் ஏற்படும். கடன்களை அடைப்பதற்கான உதவிகள் கிடைப்பதால்மகிழ்ச்சி அடைவீர்கள். விவாதங்கள் வந்துபோகும்.

**கும்பம்:** குடும்பத்தினர் உங்களின் செயல்பாடுகளுக்கு உறுதுணையாக இருப்பார்கள். பெண்களுக்கு மனஅமைதியற்ற சூழல் ஏற்படும்.

**மீனம்:** மனைவியின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த இடத்தில் உதவிகள் கிடைக்காததால் வருந்துவீர்கள். அரசாங்கப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும்.

# உயர்தரப் பரீட்சை ஒக்ரோபரில்?

கண்டி, ஜூலை 13
பாடசாலை மாணவர்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய க.பொ.த உயர்தரப் பரீட்சை நடத்தும் திகதியை மாற்ற ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இணக்கம் தெரிவித்துள்ளார்.
கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொண்ட ஜனாதிபதியிடம், உயர்தர பரீட்சைத் திகதியை எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்கு மாற்றுமாறு மாணவர்கள் சிலர் கோரிக்கை விடுத்தி ருந்தனர். இக் கோரிக்கைக்கு உடனடியாக பதிலளித்துள்ள ஜனாதிபதி இந்த விடயத்தை உடனடியாகக் கல்வி அமைச்சிடம் கொண்டு செல்ல நடவடிக்கை மேற்கொள்வதாக மாணவர்களிடம் உறுதியளித்துள்ளார். (ரி3)

# கொஸ்கொட தாரகவுடன் தொடர்பு வைத்தவரிடம் கையெறி குண்டு மீட்பு

கொழும்பு, ஜூலை 13
பாதாள உலகக் குழு உறுப்பினர் கொஸ்கொட தாரகவுடன் நெருங்கிய தொடர்பு களைப் பேணியவர் என சந்தேகிக்கப்படும் முத்தெட்டுவட்ட ஒப்பநாயக்க என்பவரிடமிருந்து கையடக்கத்தொலைபேசியொன்றையும் கையெறி குண்டொன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.
கொஸ்கொட தாரகவின் சகாவானகளு மல்லி எனப்படும் ரோஹான் பிரதீப் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது இந்த விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டதையடுத்து, தொலைபேசியையும், கைக்குண்டையும் பொலிஸார் மீட்டுள்ளனர். (ரி1)

# பேருந்து பணிப்புறக்கணிப்பு தற்காலிகமாக நிறுத்தம்

கொழும்பு, ஜூலை 13
இன்று நள்ளிரவு முதல் மேற்கொள்ளப்படவிருந்த பேருந்து பணிப்புறக்கணிப்பை தற்காலிகமாக கைவிடத் தீர்மானித்துள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீரவுடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
மேலும், தமது கோரிக்கைகளுக்கு ஒரு வார காலத்திற்குள் தீர்வு வழங்கப்படவில்லை எனின் மீண்டும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் அஞ்சன பிரியன்ஜித் தெரிவித்தார். (ரி3)

# தாமதமின்றி தீர்வை வழங்குங்கள்

## தாதிய சேவையாளர் சங்கம் வேண்டுகோள்

கொழும்பு,ஜூலை 13
அரச தாதிய சேவை உத்தியோகத்தர்களது பதவி உயர்வு, இடமாற்றல் மற்றும் நியமனம் தொடர்பான சிக்கல் ஆகிய பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்ந்தும் தாமதப்படுத்தப்படுமானால் நாடளாவிய ரீதியில் சேவையாற்றும் தாதிய உத்தியோகத்தர்களில் 5ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை ஒன்று திரட்டி சுகாதார அமைச்சின் அலுவலகத்துக்கு கால்நடையாகச் சென்று தமது பிரச்சினைகளுக்கான தீர்வை வலியுறுத்தத் தீர்மானித்துள்ளதாக அரச ஐக்கிய தாதிய சேவையாளர்கள் சங்கத்தின் தலைவர் முத்தெட் டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.
இரவு பகல் பாராது சேவையாற்றும் தாதிய சேவையாளர்கள் தமது தொழில்சார் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு யாசகர்கள் போன்று அதிகாரிகளுக்குப் பின்னால் அலைய வேண்டியிருப்பது கவலைக்குரியதெனவும் மேலும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார். (ச)

# ஈவினையில் கசிப்புடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 13
இருவேறு தினங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது ஈவினை கலையரசி பகுதியில் கசிப்புடன் இருவர் கைது செய்யப்பட்டுள் ளதாகக் கூறப்பட்டது.
கடந்த வெள்ளிக்கிழமை 5 லீற்றர் கசிப்புடன் 45 வயதுடைய பெண் ஒருவரும், நேற்றைய தினம் அதே பகுதியில் மேற்கொண்ட நடவடிக்கையின் போது 2 போத்தல் கசிப்புடன் 50 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.
காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கண்காணிப்பின் கீழ் செயற்படும் பொலிஸார் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின் போது இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுடன் இவர்கள் மேலதிக நீதிமன்ற நடவடிக்கையின் நிமித்தம் அச்சுவேலி பொலிஸ்நிலையைத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3-25)

# ஹெரோய்னுடன் இருவர் கைது

கிளிநொச்சி, ஜூலை 13
பஸ் தரிப்பிடத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இருவர் தருமபுரம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர். குறித்த சம்பவம் கிளிநொச்சி புளியம்பொக்கணைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.
அவர்களிடமிருந்து 4 கிராம் 150 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.
இவர்கள் கொடிகாமம் மந்துவில் மற்றும் கிளிநொச்சி விவேகாந்தா நகரைச் சேர்ந்த விற்பனையாளர்கள் என தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர். (ரி3-316)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் கைது



மட்டக்களப்பு, ஜூலை 13
மட்டக்களப்பு மாவட்ட வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட வம்மியடி யூற்றுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த ஒருவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.
கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து உற்பத்தி செய்யப்பட்ட குறித்த அளவு கசிப்பையும் கைப்பற்றியுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;
அப்பகுதி கிராம சேவகருக்குக் கிடைத்த தகவலையடுத்து, கிராமசேவகர் சகிதம் வெல்லாவெளிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆனந்தசிறி உள்ளிட்ட குழுவி னர் நேற்று மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, வம்மியடியூற்றுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி செய்து கொண்டிருந்த ஒரு வரை பொலிஸார் கைது செய்துள்ளதோடு, அதற்குப் பயன் படுத்திய உபகரணங்களையும் பறிமுதல் செய்துள்ளனர்.
மிக அண்மைக்காலமாக சட்டவிரோதமான முறையில், கசிப்பு, மற்றும் கோடா உற்பத்திகள் அதிகரித்துள்ளதால் பொலிஸார், கிராம சேவை உத்தியோகத்தர்கள், சிவில் பாதுகாப்புக் குழுக்கள், மற்றும் பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து அவற்றைக் கைப்பற்றி வருவதும், சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். (ரி2-40)



# தனிமைப்படுத்தல் முகாமில் இருந்த 29 பேர் விடுவிப்பு

வவுனியா, ஜூலை 13
வவுனியா, பம்பைமடு இராணுவ முகாமில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த 29 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.
பங்களாதேஸ் நாட்டில் சிக்கியிருந்தவர்களில் இலங்கை அரசாங்கத்தால் அழைத்து வரப்பட்ட ஒரு தொகுதியினர் கடந்த 27 ஆம் திகதி வவுனியா, பம்மைமடு தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவர்களுக்கு கொரோனாத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில், அவர்கள் தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்து விடுவிக்கப்பட்டனர். இதன்போது தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப் பட்டமைக்கான சான்றிதழ்களும் இராணுவத்தினரால் அவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.
கொழும்பு, கம்பஹா, களுத்துறை, பொலனறுவை, மன்னார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குறித்த 29 பேரும் இராணுவத்தின் பாதுகாப்புடன் பேருந்துகளில் அவர்களது சொந்த இடங்களுக்கு கூட்டிச் செல்லப் பட்டு விடுவிக்கப்பட்டனர். (ரி3-18)

# உயிரிழந்த இளைஞனுக்கு கொரோனா இல்லை

சிலாபம்,ஜூலை 13
சிலாபம் வைத்தியசாலையில் காய்ச்சலால் உயிரிழந்த இளைஞனுக்கு கொரோனாத் தொற்று இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாரவில பிரதேசத்தை சேர்ந்த 23 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
குறித்த இளைஞனின் உயிரிழப்பு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட வைத்திய பரி சோதனையின் பின்னர் வெளியாகிய அறிக்கையில்



இந்த விடயம் தெரியவந்ததாக சிலாபம் மாவட்ட வைத்தியசாலை இயக்குநர் கபில மல்லவாராச்சி தெரிவித்துள்ளார்.
குறித்த இளைஞன் முந்தலம் பிரதேசத்தில் உள்ள தனது தாயின் வீட்டுக்குச் சென்ற சந்தர்ப்பத்தில் காய்ச்சல் ஏற்பட்டு முந்தலம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர் ஆபத்தான நிலையில் இருந்தமையினால் சிலாபம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.
அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். அதேவேளை அவரின் உடல் கொரோனா சட்டத்திற்கமைய தகனம் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ரி3)



# பெறுமதியான பொருள்களை ஏற்றுமதி செய்யுங்கள்

*அதிக இலாபம் பெறலாம் என ஜனாதிபதி ஆலோசனை*

கொழும்பு, ஜூலை 13

விவசாயப் பொருள்களை ஏற்றுமதிசெய்யும்போது பெறுமதி சேர்க்கப்பட்ட பொருள்களுக்கு முன்னுரிமையளித்து அதிக இலாபம் ஈட்டுவதற்கு முயற்சிக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஸ விவசாயிகளிடம் தெரிவித்துள்ளார்.

கண்டி, ஹசலக்கவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார் என்று அவரது ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது;

இடைத்தரகர்களிடம் அகப்பட்டுவிடாது நெல் அறுவடைகளை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலைக்கு வழங்குமாறு ஜனாதிபதி விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

காட்டு யானைகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று கிராமவாசிகளிடம் தெரிவித்த ஜனாதிபதி, மினிப்பே பிரதேசவாசிகள் முகங்கொடுத்துள்ள குடிநீர்ப் பிரச்சினை குறித்தும் கவனம் செலுத்தினார். ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் க.பொ.த உயர்தரம் வரை கல்வி கற்பதற்கான வசதிகளைக்கொண்ட பாடசாலை ஒன்று ஹசலக்க பிரதேசத்தில் இல்லாமையினால் பிள்ளைகள் எதிர்நோக்கும் கஷ்ரங்கள் குறித்தும் மக்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர் என்றுள்ளது. (ப)

# சிறுபான்மை மக்களை கண்காணிக்கவில்லை!

*ஐ.நா அறிக்கையாளருக்கு இலங்கை அரசு அறிக்கை*

கொழும்பு, ஜூலை 13

**இலங்கையில் சிறுபான்மை இன மக்களைக் கண்காணிக்கும் நடவடிக்கையில் பாதுகாப்புத் தரப்பினர் ஈடுபடவில்லை என அரசு அறிவித்துள்ளது.**

அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமைகளுக்கான சுதந்திரம் குறித்து ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் கிளெமென்ட் என் வுயுல் கருத்துத் தெரிவித்திருந்தார். அதில் சிறுபான்மை மக்கள் ஒன்றுகூடுவதற்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்று அவர் தெரிவித்திருந்தார். இதற்கு விடுத்துள்ள பதில் அறிக்கையிலேயே அரசு இவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தேசிய பாதுகாப்பு நலன்களை அடிப்படையாகக்கொண்டு வழமையான சோதனை நடவடிக்கைகள் மாத்திரம் இடம்பெறுகின்றன. விசேடமாக எந்தக் குழுவைச் சேர்ந்த மக்களையும் கண்காணிக்கும் நடவடிக்கையில் பாதுகாப்புத் தரப்பினர்கள் ஈடுபடவில்லை. உலகெங்கும் அதிகரித்துவரும் தீவிரவாத சக்திகளின் நுட்பமான நடவடிக்கைகளின் மத்தியில் எந்த நாடும் அதன் தேசிய நலன்களை அலட்சியம் செய்வதால் மோசமான விளைவுகள் ஏற்படலாம்.

கண்காணிப்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினரை சட்ட அமுலாக்கல் தரப்பினரிடமோ அல்லது மனித உரிமைகள் அல்லது பொலிஸ் ஆணைக்குழுவிடமோ முறைப்பாடுகளை மேற்கொள்ளுமாறு அழைக்கின்றோம். முறைப்பாடுகள் பதியப்பட்டால் இந்தச் சம்பவங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள முடியும் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# மன்னிப்பு கோரினார் நியோமல் ரங்கஜீவ

கொழும்பு, ஜூலை 13

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப்பிரிவின் முன்னாள் பொலிஸ் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ, கொழும்பு உயர் நீதிமன்றுக்கு வெளியே ஒளிப்பட ஊடகவியலாளரிடம் தாம் நடந்துகொண்ட விதத்துக்காக மன்னிப்புக் கோரியுள்ளார்.

இது குறித்து ஊடகங்களுக்கு அவர் தெரிவிக்கும்போது,

அவரின் தோற்றம் எனக்கு சங்தேகத்தை ஏற்படுத்தியது. ஊடகவியலாளர்களால் தான் நாட்டு மக்கள் பல விடயங்கள் தொடர்பிலும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

ஊடகங்களுடன் எந்தப் பிரச்சினையையும் ஏற்படுத்திக் கொள்ள நான் எண்ணவில்லை, அங்கு ஏற்பட்டது பாதுகாப்பு குறித்த ஒரு பிரச்சினையே தவிர, ஊடகங்களுடன் எந்த முரண்பாடும் எனக்கு இல்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் மிகவும் வருத்தமடைகின்றேன். இதனால் ஏற்பட்ட இடையூறுக்கு நான் வருந்துகின்றேன். நான் நடந்துகொண்ட விதத்துக்காக மன்னிப்புகோருகின்றேன்." என்றார்.

பொலிஸ் பரிசோதகர் நியோமால் ரங்கஜீவ கொழும்பு மேல்நீதிமன்ற வளாகத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை தனது கடமையில் ஈடுபட்டிருந்த ஒளிப்பட ஊடகவியலாளர் ஒருவரை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டார். அவரை இழுத்துச்சென்று பொலிஸ் பிரிவில் ஒப்படைத்திருந்தார். இந்தச் சம்பவம் குறித்து பல அமைப்புகளும் கண்டனம் தெரிவித்திருந்தன. உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. (த)

# வேலைவாய்ப்பு என்றுகூறும் பரப்புரைகளுக்கு ஏமாறாதீர்கள்

மட்டக்களப்பு, ஜூலை 13

அரச சார்புக் கட்சிகளின் அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்பு என்ற போலியான பரப்புரைகளை நம்பி தமிழ் மக்கள் ஏமாறக் கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் மாணிக்கம் உதயகுமார் தெரிவித்துள்ளார்.

மண்டூரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேர்தல் பரப்புரையின் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பலர் போட்டியிடுகின்றனர். அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்பு என்ற போலியான பரப்புரைகளை பல கட்சிகள் மேற்கொள்கின்றன.

த.தே.கூட்டமைப்பு தவிர்ந்த ஏனைய அனைத்துக் கட்சிகளுமே பேரினவாத அரசின் ஆசீர்வாதத்துடன் தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை தடையின்றி செயற்படுத்துவதற்கான ஆணையைப் பெறுவதற்காக களமிறக்கப்பட்ட கட்சிகளாகும். நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அளிக்கின்ற ஒவ்வொரு வாக்கும் சிங்கள பெரினவாதத்துக்கும் அவர்களின் கைக்கூலிகளுக்கும் அடிக்கின்ற சாட்டையாக அமைய வேண்டும். என்றார். (த)

# வன்னியில் எமக்கு வாக்களிக்காதீர்!

மன்னார், ஜூலை 13

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிடும் பிரபாகணேசன் தலைமையிலான ஜனநாயக இடது சாரி முன்னணியின் மன்னார் மா்வட்ட வேட்பாளர்கள் இருவர் மக்கள் தமக்கு வாக்களிக்கக் கூடாது என்று தெரிவித்துள்ளனர்.

கட்சியினுடைய கொள்கைகளும், கோட்பாடுகளும் ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளதால், இருவரும் குறித்த கட்சியில் இருந்து வெளியேறிக்கொள்வதோடு, குறித்த தேர்தலின் போது தங்களுக்கு யாரும்வாக்களிக்க வேண்டாம்எனவும்அவர்கள் கோரியுள்ளனர். இடது சாரி முன்னணி சார்பில் மன்னாரில் இலக்கம் 5இல் போட்டியிடுகின்ற நிகேதன் மற்றும் இலக்கம் 8 இல் போட்டியிடுகின்ற விக்னராஜா ஆகிய இருவருமே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். மக்களுடைய துன்ப, துயரங்களுக்கும் தோள் கொடுக்கும் எந்த ஒரு நோக்கமும் இவர்களிடம் இல்லை என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ப-56)

# கொரோனா அதிகரித்தால் தொழிலின்மை ஏற்பட்டு பாதிப்புவரும்

*எச்சரிக்கிறார் ரணில் விக்கிரமசிங்க*


கொழும்பு, ஜூலை 13

கொவிட் 19 வைரஸ் தாக்கம் தீவிரமடைந்தால் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடையும். இதனால் நாட்டில் தொழிலின்மை பிரச்சினை ஏற்படும். பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அரசிடம் உறுதியான கொள்கை கிடையாது. ஆளும் மற்றும் எதிர்த் தரப்பினரை உள்ளடக்கி முறையான கொள்கைகளை தற்போது வகுக்க வேண்டும் என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இளம் தலைமுறையினர் அரசியலை வெறுப்பதற்கு அரசியல்வாதிகளே காரணம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரையும் தியவன்னா ஆற்றில் தள்ள வேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள்.

225 உறுப்பினர்களை ஆற்றில்தள்ளினால் ஆறும், சுற்று சூழலுமே பாதிக்கப்படும். இளம் தலைமுறையினர் அரசியலை வெறுப்பது அவர்களின் தவறல்ல. அரசியல்வாதிகளின் தவறு. தவறுகளைத் திருத்திக் கொண்டு அரசியலில் ஒன்றிணைய இளைஞர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கடந்த காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நாம் முடிந்தவரையில் நிறைவேற்றினோம். பல விடயங்களை வெற்றி கொள்ள முடியாமல் போனமைக்கு அரசியல்ரீதியான [illegible] செல்வாக்குச் செ[illegible] பொருளாதாரம், [illegible]



வைரஸ் தாக்கம் ஆகிய சவால்களை கட்டுப்படுத்த வேண்டுமாயின் முறையான அரசு தோற்றம் பெற வேண்டும். புதிய கொள்கைத்திட்டங்கள் [illegible]பட வேண்டும்-என்றார். (த)

நேர்கண்டவர் : இரா.புத்திரசிகாமணி

# இனவாதம் என்பது ஊறுகாயே!



யாழ்.தேர்தல் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பாக பெண்வேட்பாளராகக் களமிறங்கியுள்ள திருமதி பவதாரணி ராஜசிங்கத்துட னான நேர்காணல் இது.

**கே:** ள்வி - இதுவரைகாலமும் கொழும்பிலேயே வாழ்ந்துவந்த நீங்கள் திடீரென எப்படி யாழ்.தேர்தல் மாவட்டத்தில் அரசியல் பிரவேசம் செய் தீர்கள்?

**ப:** தில்: இல்லை, இல்லை. நான் யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயில் பிறந்து வளர்ந்தவள். கல்வியின் நிமித் தம் கொழும்பில் வளர்ந்தாலும் யாழ்ப்பா ணம் தான் எனது தாய்மண். அரசியல் ஆர்வம் இல்லாவிட்டாலும் சிறுவயது முதலே பல்வேறு சமூக சேவைகளைச் செய்து வந்துள்ளேன். நான் அங்கத்து வம் வகிக்கும் அமைப்புகள் மூலம் பல் வேறு நலன்புரி உதவிகளையும் செய்து வந்துள்ளேன்.

**கே:** உங்களுடைய சமூக சேவை உணர்வு பாராட்டத்தக்கது. எனி னும் நாம் கேட்டது உங்களுடைய அரசி யல் பிரவேசத்தைப் பற்றி..?

**ப:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட எந்த ஓர் அரசியல் கட்சி யும் என்னை அரசியல் களத்துக்கு அழைக்கவில்லை. இந்த நிலையில் அங் கஜன் இராமநாதன் தான் என்னை அழைத்தார். அரசியலுக்கு அறிமுகம் செய்தார். யாழ்.தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட முடிவு செய்தேன்.

**கே:** கேள்வி - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முற்றுமுழுதாக தமிழர்க ளுக்கு எதிரான இனவாதக் கட்சி என்று தமிழ் மக்கள் அடையாளப்படுத்தியுள்ள நிலையில் மக்கள் மத்தியில் உங்களுக்கு வரவேற்பு கிடைக்குமென நம்புகிறீர் களா?

**ப:** இனவாதம் என்பது ஊறுகாய் போல அரசியலில் இதை தேவைக்கேற்ப ருசிக்காக தொட்டுக் கொள்கின்றனர். அது பசியைத் தீர்க்காது நான் இனவாதத்தை ஆதரிப்பவளில்லை. ஆரம்பத்தில் மக்களிடம் சென்றபோது என்னையும் முறைத்துப் பார்த்தார்கள். படிப்படியாக எனது நிலைப்பாட்டையும் கொள்கைகளையும் தெளிவுபடுத்திய பின் இன்று எனக்கு ஆதரவாக இருக் கின்றனர்.

**கே:** உங்களுக்கு வெற்றிகிடைக்கும் என்று நம்புகின்றீர்களா? உங் கள் கட்சியில் எத்தனை பேர் வெற்றிபெ றுவீர்கள்?

**ப:** தேர்தல் ஒரு ஓட்டப்பந்தயம் போன்றது. ள்பவர் கள் எல்லோருமே வெற்றிபெற வேண் டும் என்ற நோக்கத்துடன்தான் கலந்து கொள்கிறார்கள். நானும் இந்த நோக்கத் துடன் தான் இறங்கி உள்ளேன். வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை உண்டு. ஆகக் குறைந்தது மூன்று ஆசனங்க ளைக் கைப்பறுவோம்.

**கே:** ஒருவேளை வெற்றி கிட்டாவிட் டால் மீண்டும் கொழும்புக்கே திரும்பிச் சென்று விடுவீர்களா?

**ப:** இல்லை நான் எனது தேர்தல் அறிக்கையில் எதை எல்லாம் கூறி இருக்கிறேனோ. அதை எல்லாம் செய்து முடிப்பேன். இன்றும் நமது மக் கள் அடிப்படை அத்தியாவசி யத் தேவைகளுக்கு கூட அடுத் தவர்களின் தயவை நாடுகின் றனர். எல்லா விடயங்களை யும் நாடாளுமன்றத்தின் மூலம்தான் பெறமுடியும் என் பதில்லை. கிராம சேவகர் மட் டத்தில், பிரதேச சபை மட்டத் தில், மாகாண சபை மட்டத்தில், அதிகாரிகள் மட்டத்தில் தீர்க்கக் கூடிய விடயங்கள் பலவுண்டு. அவற்றைத் தெளிவுபடுத்தி என்னாலான உதவிகளையும் வழிகாட்டல்களையும் மேற் கொள்வேன். எனது சேவை தொடரும்.

> இனவாதம் என்பது ஊறுகாய் போல அரசியலில் இதை தேவைக்கேற்ப ருசிக் காக தொட்டுக் கொள்கின் றனர். அது பசியைத் தீர்க் காது நான் இனவாதத்தை ஆதரிப்பவளில்லை. ஆரம்பத்தில் மக்களிடம் சென்றபோது என்னையும் முறைத்துப் பார்த்தார்கள். படிப்படியாக எனது நிலைப் பாட்டையும் கொள்கைகளை யும் தெளிவுபடுத்தியபின் இன்று எனக்கு ஆதரவாக இருக்கின்றனர்.

**கே:** நீங்கள் அரசுக்கு ஆதரவான கட்சியில் போட்டியிடுகின்றீர்கள். ஜனாதி பதி கோத்தாபயவையோ பிரத மர்மஹிந்தராஜபக்ஷவையோ சந்தித்தீர்களா?

**ப:** இல்லை அவர்களை நான்சந்திக்கவில்லை. ஆனால் எமது கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் என்ற வகையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துள்ளேன்.

**கே:** இணக்க அரசியலைப்பற்றி உங் களின் நிலைப்பாடு என்ன?

**ப:** இதைப்பற்றி கருத்து கூற நான் விரும்பவில்லை. அதேவேளை எந்தச் சந்தர்ப்பத்திலும் சிறு பான்மையினர்களாக நாம் தனிப்பட்ட முறையில் தீர்மானம் எடுக்கும் ஒரு சக்தி யாக முடியாது. ஆனால் அந்த தீர்மா னத்தை எடுக்க வைக்கும் சக்தியாக மாற முடியும்.

## சுதேச மருத்துவ முறை பாதுகாக்கப்பட வேண்டும்

### ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

பாரம்பரிய சுதேச மருத்துவ முறையைப் பாது காப்பதற்கு முறையான நிகழ்ச்சித்திட்ட மொன் றைத் தயாரிக்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வலியுறுத்தி யுள்ளார். பாரம்பரிய சுதேச மருத்துவ முறையைப். பிரபல்யப்படுத்தி வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கான வாய்ப் புகளையும் அவர் சுட்டிக்காட்டினார்.

கண்டி மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற் கொண்டு தெல்தெனிய பேருந்து நிலையத் துக்கு அருகில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்ட ஜனாதிபதியிடம் சுதேச மருத் துவர் ஒருவர் கைளித்த மனு ஒன்றைப் பெற் றுக்கொண்டபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை கண்டியில் இடம்பெற்ற மற்று மொரு மக்கள் சந்திப்பில், சுயதொழில், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்காக கிராமிய கடனுக்கு விண்ணப்பிக்கும்போது ஏற்படும் பிரச்சினைகளை அரச வங்கிகளுடன் கலந்துரையாடி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப் பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ப)

## படையினரின் நலன்வேண்டி தலைமுடி காணிக்கை

### யாழில் முதியவர் நெகிழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூலை 13

கொரோனா நோய்த் தடுப்பில் ஈடுபட்ட முப்ப டையினர், பொலிஸார், மற்றும் சுகாதாரத் துறையினரின் நலன்வேண்டி, 108 நாள் கள் விரதமிருந்த 81 வயது முதியவர் 108 ஆவது நாளான நேற்று தனது தலைமுடி யைக் காணிக்கை வழங்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற் றுள்ளது.


யாழ்ப்பாணம் கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி நடராசா என்ற 81 வயது முதியவரே இவ்வாறு நெகிழ்ச்சியான சம்பவம் ஒன்றைப் புரிந்துள்ளார். அவர் ஓய்வு பெற்ற இராணுவச் சிப்பாய் என்று தெரிவிக்கப்பட்டது. கடந்த மார்ச் மாதம் 21 ஆம் திகதி முதல் கொரோனா வைரஸ் தொற் றுக் காரணமாக ஊரடங்கு அமுல்படுத்தப் பட்டு, வைரஸ் தொற்றுப் பரவாமல் தடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த முப்படையினர், பொலிஸார் மற்றும் சுகாதாரத் துறையினரின் நலன் வேண்டி குறித்த முதியவர் கடந்த மார்ச் மாதம் 27 ஆம் திகதி முதல் விரதமிருந்தார். 108 நாள்கள் விரதம் இருந்த அவர் நேற் றையதினம் தனது தலைமுடியை காணிக்கை வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது. இந் தச் சம்பவம் மக்கள் மத்தியில் பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ப-106)





# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர் வைத்தியலிங்கம் பேரம்பலம்



**மண்ணுலகில்**
**13.05.1925**

**விண்ணுலகில்**
**13.06.2020**

தொண்ணூறொடு ஆறாண்டு வாழ்ந்து ஆயிரம்
பிறைகள் கண்ட எங்கள் ஐயா
இறையருளால் பூத்துக்காய்த்து மணம் வீசி
இல்லற வாழ்வில் நல்லறம் பேணி
நேற்று வரை எம்மை வழி நடத்தி கல்விதந்து
உயர்த்தி வைத்துப் பார்த்து மகிழ்ந்த ஐயா
இன்று பாசத்தின் வேரறுத்தார் பற்று விட்டார்
விண்ணுலகம் சென்றடைந்தார்
நேசமிகு பாதச்சுவடுகளை முற்றத்தில்
தேடித் தேடிப் பார்க்கின்றோம்
இன்னொரு பிறவி எம்மொடு வருமா
என்று ஏங்கி நின்று
இறைநிலையில் அவரது ஆன்மா
சாந்தியடைய சிரம்தாழ்த்தி
கரங்கூப்பி அவர் பாத கமலங்களை
வணங்கி நிற்கின்றோம்

எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எமது அன்புத் தெய்வம் வைத்தியலிங்கம் பேரம்பலம் அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு, நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசி, மின்னஞ்சல், சமூக வலைத்தளங்கள் ஆகியவை ஊடாக எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், நினைவு மலரில் தங்கள் நினைவுகளை பகிர்ந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும், மேலும் அன்னார் சுகயீனமுற்ற வேளையில் வைத்தியசாலையில் சிகிச்சை அளித்த மருத்துவர்களுக்கும், தாதிமார்களுக்கும் மற்றும் பணியாளர்களுக்கும் வைத்தியசாலையில் வந்து பார்த்து வாஞ்சையுடன் பிரார்த்தித்து சென்றவர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், சகல நிகழ்வுகளிலும் எம்முடன் கைகோர்த்து இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பழைய தபாற் கந்தோர் ஒழுங்கை,**
**தலையாழி, கொக்குவில்**

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

---

# மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 04 . 1943



மறைவு
12 . 07 . 2020

## முத்தையா இராசரத்தினம்

**(முத்து இராசரத்தினம், எழுத்தாளர்)**

நீராவியடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், இல.54. சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட முத்தையா இராசரத்தினம் நேற்று (12.07.2020) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா சரஸ்வதி அம்மா தம்பதியரின் கனிஸ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், ஜயபாலினி (ஆசிரியர், மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), பிரணவன் (காசாளர், நொதோன் சென்றல் வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுரேந்திரனின் (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி) அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, கமலேஸ்வரி மற்றும் மகேஸ்வரி, யோகேஸ்வரி, யோகரத்தினம், தங்கராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

---

# மரண அறிவித்தல்

பிறப்பு
09 . 09 . 1960



இறப்பு
11 . 07 . 2020

## தேவதாஸ் இராஜேஸ்வரி (நிர்மலா)

தேவதாஸ் இராஜேஸ்வரி (நிர்மலா) 11.07.2020 காலமாகிவிட்டார்.

அன்னார் வின்சலோசின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சேவியர் நவமணியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முத்துராசா றீற்றம்மாவின் மருமகளும் நிலக்சி (பிரான்ஸ்), வக்சி (பிரான்ஸ்), அஜன், றொக்சி, நிர்மலன் ஆகியோரின் அன்பு தாயாரும் சனா, சிம்சி, சுவீற்றி ஆகியோரின் வளர்ப்பு தாயாரும் றொபோட் (பவுன் - பிரான்ஸ்), அஜந்தன் (பிரான்ஸ்), நிருபன் ஆகியோரின் மாமியாரும் நிலன், சந்தோஸ், அபி, யதுசன், கிளாரசன், அனலியா, ஆசினி, எலோதினா, எர்வின், றொமாரியோ ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ராஜன் காலஞ்சென்ற பாபு, கலா, யொகிலா ஆகியோரின் அன்பு சகோதரியும் ஈஸ்வரி, தயா, செல்வம், றெஜிஸ், புஸ்பராசா ராணி, நோபட் லில்லி, எசப்பியூஸ் ரதி, இராசகுலம் பெரியபிள்ளை, விக்ரர் அன்னக்கிளி, சேகர் குஞ்சு, மோசேஸ் மேபில் ஆகியோரின் மைத்துனியும் சின்னத்துரை மரியராணி, சின்ராசா அன்னமலர் (லக்ஸ்மாலா), புஸ்பராசா ராணி மார்க்பவளம் ஆகியோரின் பெறாமகளும் காலஞ்சென்ற லில்லி தவரட்ணம் றோஸ், மகேந்திரன் பொன்னார், காலஞ்சென்ற ஞானேந்திரன், அருள், சேகர்நோனா, குமார் சாந்தி ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.07.2020) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லடக்கத்திற்காக புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:- குடும்பத்தினர்**
**077 668 1911**



## சுகாதாரப் பாதுகாப்புடன் ஆலயத்துக்கு வாருங்கள்

*மாவட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய பரிபாலன சபை அறிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூலை, 13

மாவட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலின் வருடாந்த காம்யோற்சவம் ஆரம்பமாகியுள்ள நிலையில் நாட்டில் அன்மைய நாள்களாக கொவிட் 19 நோய்த் தாக்கம் அதிகரித்து இருப்பதனால் ஆலயத்துக்கு வருகைதரும் பக்தர்கள் முகக்கவசம் அணிந்தும், கைகளைச் சவர்க்காரம் இட்டுக் கழுவி பாதுகாப்பு விதிமுறைகளைப் பேணி வருமாறு ஆலய பரிபாலன சபை அறிவுறுத்தியுள்ளது.

மாவட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலில் எதிர்வரும் 15ஆம் திகதி திருக்கார்த்திகை உற்சவம் இடம்பெறவுள்ளது. காலை 5 மணிக்கு உஷத்தகாலப் பூசையும், 5.30 மணிக்கு திரவ்வியபிஷகமும், 6 மணிக்கு ஷண்முகார்ச்சனையும், 7 மணிக்கு 108 சங்காபிஷேகமும், 8.30 மணிக்கு காலைச்சந்திப் பூசையும், 9.30 மணிக்கு சண்முகார்ச்சனையும், 12.45 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் இடம்பெற்று 1.15 மணியளவில் வீதியுலா இடம்பெறும்.

பின்னர் மாலை 5 மணிக்கு அபிஷேகமும், 5.30 மணிக்கு சாய்ராட்டை பூசையும், 6.30 மணிக்கு 2ஆம் கால பூசையும் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையும், 9 மணிக்கு அர்த்தசாம பூசையும் இடம்பெறும். 19ஆம் திகதி தேர்திருவிழாவும், 20ஆம் திகதி ஆடி அமாவாசை உற்சவமும் இடம்பெறவுள்ளது என்று பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ப)

# சுயநலத் தேர்தல் அரசியல் ஆரோக்கியமானது அல்ல

## தமிழ் மக்கள் பேரவை வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 13

**ஒரு நியாயமான தீர்வுக்காகப் போராடிக்கொண்டிருக்கும் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தேர்தல் அரசியலால் கட்சிகளுக்குள்ளேயும், கட்சிகளுக்கிடையேயும் எழுந்துள்ள ஒற்றுமைக்குலைவு ஒரு வேதனையான விடயமாக அமைந்திருக்கிறது. இன்றைய எமது நிலையில் குழுக்களாகப் பிரிந்து நின்று சுயநலத் தேர்தல் அரசியல் செய்வது ஆரோக்கியமான அணுகுமுறையாக அமையாது என்று தமிழ் மக்கள் பேரவை வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் பேரவை அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

எமது வாக்குகள் அற்ப சலுகைகளுக்காக விலை பேசப்படும் இந்த நிலையிலே எமது தேசிய நலனில் அக்கறை கொண்டுள்ள நாம் பிரிந்து நின்று சண்டையிடுவதற்கான காரணங்களைத் தேடுவதிலும் பார்க்க ஒற்றுமைப்பட வேண்டியதற்கான அவசியத்தையும் அதன் அனுகூலங்களையும் ஆராய்வது ஆரோக்கியமானதாக அமையும். பல்வேறு அழுத்தங்களால் தடம்மாறி நிற்கும் மக்கள், எம் மக்கள் அல்ல என்று ஆகிவிடாது அவர்களையும் தடம்மாற்றி சலுகைகளுக்காக எமது வாக்குகள் விலைபோகாது என்பதை சரியான முறையில் எமது வாக்குரிமையைப் பயன்படுத்தி நிரூபிப்போமாக இருந்தால் எதிர்காலத்தில் இவ்வாறு விலை பேசும் செயற்பாடுகளைக் குறைத்துக் கொள்ள முடியும்.

பொது விடயங்கள் மற்றும் அடிப்படைப் பிரச்சினைகள் சம்பந்தமாகவேனும் நாம் ஒற்றுமைப்படாவிட்டால் நாம் பிரித்தாளப்பட்டு எமது அபிலாசைகள் சிதைக்கப்படுவதற்கான ஆபத்து நிலை இருக்கிறது.

கோணேசர் கோயிலும் நல்லூர் ஆலயமும் கூட நம் பூர்வீகமல்ல என வாதிடுபவர்களுக்குக்கூட இது வரப்பிரசாதமாக அமைந்துவிடும். இந்த ஒற்றுமைக்காக தமிழ் மக்கள் பேரவையானது அனைத்துத் தமிழ் தலைவர்களுடனும் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தி இருக்கிறது. இந்த முயற்சிகள் தொடரும். இந்த முயற்சி வெற்றி பெறுவதற்கு சரியான திசையில் சிந்திக்கும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் பெரும் பொறுப்பு தமிழ் மக்கள் முன் எழுந்து நிற்கிறது.

எத்தனையோ இடர்களைத் தாண்டி பயணித்த நாம் மனம் சோர்ந்து போகாது ஒரு தூய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்காக அனைவரும் அணிதிரண்டு சிந்தித்து வாக்களிப்போம். நாம் சந்திக்கும் ஒவ்வொருவரையும் தவறாமல் சிந்தித்து வாக்களிக்கத் தூண்டுவோம். எதிர்காலத்தின் மீது நம்பிக்கை கொள்வோம் என்றுள்ளது. (ப)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
அதிபர் சேவை - தரம் - I




திரு. சின்னத்தம்பி திரிகரன்
Best Wishes (SLPS - 1, B.Sc, Maths Trd, PGDE.PGDEM) Best Wishes
யா/அச்சுவேலி மத்திய கல்லூரியின் முதல்வர்
திரு. சி.திரிகரன் அவர்கள் 18.02.2016 முதல்
அதிபர் சேவை தரம் - 1 இற்கு பதவி உயர்வுபெற்றுள்ளார்
இவரை அக மகிழ்ந்து வாழ்த்துவதோடு, இவர் மேலும் பல
பதவி உயர்வுகளில் தடம் பதித்திட இறைவனை வேண்டுகின்றோம்.
ஆசிரியர் கழகம்
யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி.
(12440) (13.17)

பாராளுமன்றத் தேர்தல் 2020
யாழ்., கிளிநொச்சி மாவட்டம்
தமிழ் தேசியத்தின் உறுதிமிக்க பயணத்திற்கான
எதிர்பார்ப்பு..!
மாற்றம்..!
நம்பிக்கை..!



தபால் மூல வாக்காளப் பெருமக்களே!
நீங்கள் அளிக்கின்ற ஒவ்வொரு வாக்கும் உறுதிமிக்க நம் தேசியப் பயணத்திற்காகவும் எம் இனத்தின் தற்சார்பு பொருளாதார கட்டமைப்பை உருவாக்குவதற்கும்
உங்கள் தெரிவு
குருசுவாமி சுரேந்திரன். MBA (சுரேன்)




ஆதரவாளர்கள் :- தமிழ்த் தேசிய கூட்டமைப்பு
தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO)

## பாராளுமன்றத் தேர்தல் 2020

யாழ் மாவட்டம்
"இரண்டு தேசங்கள் ஒரு நாடு"




**நடராஜர் காண்டீபன்**
(சட்டத்தரணி)
சட்ட ஆலோசகர்
தமிழ் தேசிய மக்கள் முன்னணி
(அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)

X 4

தாயகம் – தேசியம் – சுயநிர்ணய உரிமை

## அதிசயம் ஆனால் உண்மை

**கொழும்பு விலையில்** அச்சுவேலி
வல்லை றோட்டில்

# ஸ்ரார் பூட்

**வியாபார ஸ்தாபனம் திறக்கப்பட்டுள்ளது**

இங்கே மளிகை பொருள்கள் முதற்கொண்டு அனைத்து பொருள்களும் கொழும்பு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. இந்த விற்பனை நிலையம் இங்கே திறக்கப்படுவது அச்சுவேலி மக்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாகும். நாங்களும் பெரும் மகிழ்ச்சியடைவதோடு எங்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் என்றென்றும் வழங்கப்படும் உங்களின் உயர்வையும் முன்னேற்றத்தையும் என்றென்றும் விரும்பும்

இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்
வீடியோ கலாமினி - அச்சுவேலி.

(J.12424) (13.17)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மருந்தாளராக கடமையாற்றும் **திருமதி பா. சிந்துஜா** அவர்களின் அன்புத் தந்தை

**கந்தையா கிருஷ்ணன்** அவர்கள்

கடந்த (17.06.2020) அன்று சிவபதமடைந்தார் அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**நிறைவுகாண் மருத்துவவியல்**
**தொழில்வல்லுநர்களின் ஒன்றியம் யாழ். மாவட்டம்.**

(J.12438) (13.17)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் X கதிர் தொழில்நுட்பவியலாளராக கடமையாற்றும் **சு. சுதர்சன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

**சபாரட்ணம் சுந்தரலிங்கம்** அவர்கள்

கடந்த (10.07.2020) அன்று காலமானார் அவர்களின் மறைவினால் துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக் கின்றோம்.

**நிறைவுகாண் மருத்துவவியல்**
**தொழில் வல்லுநர்கள் ஒன்றியம் யாழ். மாவட்டம்.**

## 3 ஆம் ஆண்டு நினைவு நாள்

தோற்றம்
04 . 08 . 1937



மறைவு
17 . 06 . 2017

**சரவணமுத்து விநாயகரட்ணம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/ மகாஜனாக் கல்லூரி)

"தோன்றின் புகழுடன் தோன்றுக அஃதில
தோன்றலில் தோன்றாமை நன்றுக"

என்ற வாக்கிற்கு இலக்கணமாக
இப் பூமியில் புகழோடு வாழ்ந்து
இன்று எம்மை விட்டு பிரிந்து சென்றாலும்
உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு பிரியாது அப்பா!
உங்களுடைய ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

பன்னாலை, தெல்லிப்பழை. (J.12431) (13.17) குடும்பத்தினர்

## தவறிவிட்டது

NPWZ 5941 இலக்கமுடைய **வாகன புத்தகம்** கோண்டாவிலுக்கும் திருநெல் வேலிச் சந்திக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள். 077 681 9765 தொடர்புகொள்ளவும்.
சன்மானம் வழங்கப்படும்

(es.32994) (13.17)

## பெயர்மாற்றம்

மட்டக்களப்பை பிறப்பிடமாகவும், முல்லைத்தீவு குமுழமுனை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட சபாபதி சச்சிதானந்தம் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை சபாபதி சசிக்குமார் என இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரை பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

**சபாபதி சசிக்குமார்**

## வீடு வாடகைக்கு

இல.695, நாவலர் வீதி.
நல்லூரில் 4 நிலப்பரப்பில் அமைந்த
வீடு வாடகைக்குண்டு.
(முன்னைய வடக்கு மாகாண
மோட்டார் போக்குவரத்து அலுவலகம்
இயங்கிய) (நிறுவனத்திற்கு உகந்தது)

**077 506 3283**

## பெயர் மாற்றம்

**வேலுப்பிள்ளை நவமணி** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **வேலுப்பிள்ளை தவமணி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் தவமணி என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**வே.தவமணி**

(c.34590) (13.17)


*கசூரினாவுக்கு*

# உயிர்காக்கும் படையினரை நியமிக்குமாறு கோரிக்கை

காரைநகர், ஜூலை 13

உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் காரைநகர் சுற்றுலா மையத்துக்கு அதிகளவில் வரத் தொடங்கியுள்ளனர். அதனால் சுற்றுலாப் பயணிகள் கடற்கரையில் நீந்தும்போது, அவர்களுக்கான பாதுகாப்பை வழங்கும் பொருட்டு உயிர் காக்கும் படையினரை நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேசசபை தவிசாளர் வி. கேதீஸ்வரதாஸ், வடமாகாண கடற்படை அதிகாரி ரியர் அட்மிரல் எஸ்.எம். டி.கே. சமரவீரவுக்கு மேற்படி கோரிக்கைக் கடிதத்தை அனுப்பியுள்ளார். கடந்த முதலாம் திகதி முதல் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வேண்டுகோளின் பிரகாரம், கொவிட் 19 சுகாதார நடைமுறைகளுக்கு இணங்க பல நவீன மாறுதல்களுடன் காரைநகர் கசூரினா சுற்றுலா மையம் திறக்கப்பட்டுள்ளது. அதனால் சுற்றுலாப் பயணிகளின் நன்மை கருதி 4 உயிர் காக்கும் படையினரை நியமிக்குமாறும் அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (சு-50)


## "கணேஷா" திருமண சேவை
(மணமகள் தேவை)

கொடிகாமம் யாழ். இந்து கௌரவ குடும்பம், அரச உயர்ந்த உத்தியோகமும், தொழிலதிபருமான, நற்பண்புடைய மாதவருமானம் 100 000/ மேல் (திருவாதிரை, 8இல் செவ்வாய் கிரகபாவம் 60) கொண்ட மணமகனுக்கு 35 வயதுக்குட்பட்ட A/L படித்த அழகிய, பண்பான, போரால் பாதிக்கப்பட்ட, பெற்றோரை இழந்த, வறுமைக்கோட்டுக்குட்பட்ட ஆதரவற்ற மணமகளை எதிர்பார்கின்றனர். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

**077 693 5338**


## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை
## முல்லைத்தீவு
## கேள்வி அறிவித்தல்
## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவு 2020/21 ஆம் ஆண்டிற்கு தேவையான வழங்கல்கள்/சேவைகள்

1. முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கு 2020/21ம் ஆண்டுக்கான பின்வரும் வழங்கல்கள் / சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.
2. அ) சமைத்த உணவு வழங்கல்கள்
   ஆ) அழுக்குத்துணிகள் சலவை செய்தல்
   2020 முதல் 2021 வரையான ஒருவருட காலப்பகுதிக்கு வழங்கல்கள், சேவைகளுக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்வி ஆவணங்கள் 13.07.2020 தொடக்கம் 27.07.2020 ம் திகதி வரை காலை 9.30மணி முதல் பி.ப.3.30 மணிவரையும் முல்லைத்தீவில் இயங்கும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும். ஒரு வைத்தியசாலைக்கு/ தொகுதிக்கு குறிப்பிட்ட ஒரு வழங்கல் /சேவைக்கான ஒரு ஆவணத் தொகுதி மட்டுமே வழங்கப்படும்.
3. அரசாங்க ஒப்பந்தத்தை செய்யமுடியாதவாறு தடை செய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடை செய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
4. விண்ணப்பிக்கத் தகுதியானோர் கீழ்க்குறிப்பிடப்படும் தொகையை செலுத்துவதுடன் வழங்கல்கள் சேவைகள் என்பவற்றுக்கான பெறுமதி ஆவணத்தையும் முல்லைத்தீவில் இயங்கும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் ,பணிப்பாளர் பணிமனையில் சமர்ப்பித்து கேள்வி ஆவணத்தை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 28.07.2020 திகதி மு.ப. 10.00 மணிக்குமுன் கிடைக்கூடியவாறு தலைவர், கேள்விச்சபை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவு எனும் முகவரிக்கு பதிவு தபாலிலோ அல்லது நேரடியாக அலுவலக கேள்வி பெட்டியிலோ இடமுடியும். கேள்விகள் யாவும் 28.07.2020 மு.ப. 10.30 மணிக்கு திறக்கப்படும்.
5. வைப்புத் தொகைகளும் ஆவணங்களும்

**A) சமைத்த உணவு வழங்கல்**

| வைத்தியசாலை | உணவுவகை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பிணைமுறி (ரூபா) |
|---|---|---|---|
| ஆதார வைத்தியசாலை, மாங்குளம் | சமைத்த உணவு | 1,500.00 | 30,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, ஒட்டுசுட்டான் | சமைத்த உணவு | 1,500.00 | 25,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, முல்லைத்தீவு | சமைத்த உணவு | 1,500.00 | 25,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, சம்பத்நுவர | சமைத்த உணவு | 1,500.00 | 25,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, அளம்பில் | சமைத்த உணவு | 1,500.00 | 20,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, கொக்கிளாய் | சமைத்த உணவு | 1,500.00 | 20,000.00 |

**B) அழுக்குத் துணி சலவை செய்தல்**

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பிணைமுறி (ரூபா) |
|---|---|---|
| ஆதார வைத்தியசாலை, மல்லாவி | 500.00 | 4,000.00 |
| ஆதார வைத்தியசாலை, மாங்குளம் | 500.00 | 4,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு | 500.00 | 4,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, நட்டான்கண்டல். | 500.00 | 4,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, ஒட்டுசுட்டான் | 500.00 | 4,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, உண்ணாப்பிலவு | 500.00 | 4,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, சம்பத்நுவர | 500.00 | 4,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, அளம்பில் | 500.00 | 4,000.00 |

06 ஏற்கனவே சேவையை வழங்கிவரும் ஒப்பந்தகாரர் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகவே கருதியே தீர்மானம் எடுக்கப்படும்.
07 கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும்போது சமுகமளிக்கலாம்.
08 கேள்வி தொடர்பான கேள்விச்சபையின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.
09 மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் தொ.இல.0212290111

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு
பி.சு.சே.ப.பணிமனை,
முல்லைத்தீவு.

## பெரமுனவின் கூட்டங்கள் இரத்து!

### கொரோனா 2 ஆம் அலை காரணமா?

கொழும்பு, ஜூலை 13
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அனைத்து தேர்தல் பரப்புரைக் கூட்டங்களையும், பேரணிகளையும் தற்காலிகமாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார். ஸ்ரீ லங்கா பொதுஜனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ச மற்றும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பங்கேற்புடன் இன்று, நாளை, நாளை மறுதினம் இடம்பெறவிருந்த மக்கள் சந்திப்புகள் அனைத்தும் நிறுத்தப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக பொதுத்தேர்தலை முன்னிட்டு வேட்பாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அனைத்து பொதுக் கூட்டங்கள் மற்றும் சிறிய ஒன்றுகூடல்களையும் மட்டுப்படுத்துமாறும் பசில் ராஜபக்ச கேட்டுக்கொண்டுள்ளார். சிறிய ஒன்றுகூடல்கள் நடத்தப்படுமாயின் அதில் சுகாதார நடைமுறைகளைக் கடுமையாகப் பின்பற்றுமாறும் பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ச கேட்டுக்கொண்டுள்ளார். இதேவேளை, நாட்டில் மீண்டும் கொரோனா அபாயம் எழுந்துள்ளதாலேயே இவ்வாறான முடிவை பொதுஜன பெரமுன அவசரமாக எடுக்க நேர்ந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (எ)

# புராணம் பாடுகிறாராம் சம்பந்தன்



### கண்டுபிடித்தார் விமல்

கொழும்பு, ஜூலை 13
"சம்பந்தன் ஒரே கதையைத்தான் மீண்டும் மீண்டும் கூறிவருகிறார். ஹன்சார்ட்டை எடுத்துப்பார்த்தால் தெரியும். உரையில் சிறு மாற்றங்கள் இருக்குமே தவிர கருப்பொருள் என்பது ஒன்றாகவே இருக்கும்" இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், அமைச்சருமான விமல்வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பு, வெள்ளவத்தை பகுதியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட் டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறான பொய் அரசியலை நடத்துகின்றது என்பது உங்களுக்கு தெரியும். நான் 2000 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்துக்கு தெரிவாகினேன். 20 வருடங்களாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துவருகின்றேன். இக்காலப்பகுதியில் சம்பந்தன் ஒரே கதையைத்தான் மீண்டும் மீண்டும் கூறிவருகிறார். 'ஹன்சார்ட்டைப் எடுத்துப்பார்த்தால் தெரியும். உரையில் சிறு மாற்றங்கள் இருக்குமே தவிர கருப்பொருள் என்பது ஒன்றாகவே இருக்கும்.

இவ்வாறு ஒரே பல்லவியைப் பாடும் சம்பந்தன் திருகோணமலைக்குக்கூடச் செல்ல மாட்டார். கடந்த ஆட்சியில் சொகுசுவீடு வழங்கப்பட்டது. ஆனால் வடக்கு மக்களின் வீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவில்லை. ஒரே கதையைக்கூறிக்கொண்டு இன்னும் எவ்வளவுகாலம்தான் பயணிப்பது?. அந்தக் கதைக்கு வழங்கக்கூடிய தீர்வுதான் என்ன? எனவே இந்தக் கதையில் இருந்து சம்பந்தன் தரப்பு வெளியில் வரவேண்டும்.

அனைத்து இன மக்களும் இலங்கையராக வாழக்கூடிய புதுக் கதையை ஆரம்பிக்கமுடியும். இப்படியான கதையே எமக்குத் தேவை. அதற்கு உயிர்கொடுக்கவேண்டும். நான் இந்த நாட்டை நேசிக்கின்றேன். அது பிளவுபடுவதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டேன்.என்றார். (ப-எ-44)

## விடுமுறை என்பது வதந்தி

கொழும்பு, ஜூலை 13
எதிர்வரும் நாள்களுக்கு அரச விடுமுறை அறிவிக்கப்படும் என்று வெளியான தகவல்களில் உண்மையில்லை என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் தீவிரம் அடைந்துள்ளதால், எதிர்வரும் நாள்களில் தொடர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. அது தொடர்பில் தெளிவூட்டும் வகையில் அரச தகவல் திணைக்களம் நேற்று விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)






## மாகாண சபை முறை ஒழிக்கப்பட மாட்டாது

### புதிய அரசமைப்பின் ஊடாக அதிகாரப்பகிர்வு என்கிறார் வாசு

கொழும்பு, ஜூலை 13
புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டாலும் அதிகாரப் பகிர்வு இல்லாதொழிக்கப்படாது. அதிகாரப்பகிர்வுக்காக நான் தொடர்ந்தும் குரல் கொடுப்பேன். இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியின் இரத்தினபுரி மாவட்ட வேட்பாளருமான வாசுதேவ நாணயக்கார நேற்றுமுன்தினம் 'உதயனிடம்' தெரிவித்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் இல்லாதொழிக்கப்படவேண்டும் என்றும், மாகாண சபை முறைமை நாட்டுக்கு அவசியமில்லை என்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்களால் வெளியிடப்படும் அறிவிப்புகள் தொடர்பில் வினவியபோதே வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது
மாகாணசபைகளுக்கு தற்போது பகிரப்பட்டுள்ள அதிகாரங்கள் எவ்வித மாற்றமும் இன்றித் தொடர்ந்தும் அமுலில் இருக்கவேண்டும் என்பதே அரசாங்கத்தின் எதிர்ப்பார்ப்பு. எனது நிலைப்பாடும் அதுவே. ஏனெனில் எமது அரசுக்கு மாகாண நிர்வாகங்களுடன் ஒத்துழைத்துச் செயற்படக்கூடிய ஆற்றல் இருக்கின்றது. புதிய அரசமைப் பொன்று இயற்றப்படும்போது '13' என்றொரு விடயம் இருக்காது. ஆனாலும், மாகாணசபைகளுக்கு புதிய அரசியலமைப்பின் ஊடாக அதிகாரங்கள் பகிரப்படும். மாகாணசபைகள், உள்ளாட்சிமன்றங்கள், மத்திய அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையில்தான் அதிகாரப்பகிர்வு இடம்பெறும். என்றார். (எ-44)

## ஐஸ்வர்யா ராய்க்கும் கொரோனா தொற்று

கொழும்பு, ஜூலை 13
முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராய்க்கும் அவரது மகளுக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அவரது கணவர் அபிஷேக் பச்சனுக்கும் மாமனார் அமிதாப் பச்சனுக்கும் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று முன்தினம் உறுதிசெய்யப்பட்ட நிலையில், நேற்று ஐஸ்வர்யா ராய்க்கும் அவரது மகளுக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து பச்சன் குடும்பத்தில் உள்ளவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். ஐஸ்வர்யாவின் மாமியும் அமிதாப் பச்சனின் மனைவியுமான ஜெயா பச்சனுக்கு தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ)

# ஒரு வழியாக மாஸ்க் அணிந்த டிரம்ப்



வாஷிங்டன், ஜூலை 13
அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் ஆரம்பத்திலிருந்து முகக்கவசம் அணிய மறுத்து வந்திருந்தார். அவருடன் நெருங்கிய அதிகாரிகளுக்கு கொரோனா தொற்று வைரஸ் உறுதி செய்யப்பட்டிருந்த நிலையிலும் அவர் முகக்கவசம் அணியவில்லை.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் காயம் அடைந்த ராணுவ வீரர்களை சந்தித்து ஆறுதல் தெரிவிக்கச் சென்றபோது முதன்முறையா ட்ரம்ப் முகக்கவசம் அணிந்து சென்றார்.
அதன்போது எந்த இடத்தில் முகக்கவசம் அணிய வேண்டும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (ரி1)

## ஓயாத கொரோனா அலை

# உலகளவில் 1.28 கோடியை கடந்தது



**உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 1.28 கோடியைக் கடந்துள்ளது.**

கொரோனா வைரஸிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை நேற்றைய நிலவரப்படி, 74 லட்சத்து 83,246 ஆக உயர்வடைந்துள்ளது.
கொரோனாவுக்கு சிகிச்சை பெற்றுவரும் 47 இலட்சத்து 98,708 பேரில் 58,781 பேருக்கு மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. கொரோனா வைரஸால் பலியானோர் எண்ணிக்கை 5லட்சத்து 67,734 ஆக உயர்வடைந்துள்ளது. உலகளவில் கொரோனாவால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா முதலாவ
தாகவும், பிரேஷில் இரண்டாவது இடத்திலும், இந்தியா மூன்றாவது இடத்திலும் உள்ளன. (ரி1)

கொரோனா எதிரொலி:

# 8,000 கைதிகள்

## கலிபோர்னியாவில் விடுதலை



சாக்ரமெண்டோ, ஜூலை 13
கொரோனா பரவல் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து 8,000க்கும் அதிகமான கைதிகளை விடுவிக்க இருப்பதாக கலிபோர்னியா அரசு தெரிவித்துள்ளது.
இதுகுறித்து கலிபோர்னியா சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளதாவது, கலிபோர்னியாவில் 8,000க்கும் அதிகமான சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்படுவதற்கான தகுதியுடன் உள்ளனர். கொரோனா நெருக்கடி காலத்துக்கு முன்னர் எடுத்த முடிவுக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. சிறையில் அடைபட்டுள்ள நபர்கள் மற்றும் ஊழியர்களின் பாதுகாப்புக் கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளனர்.

# திருமண நிகழ்வுக்கு தடை

## ஈரான் ஜனாதிபதியின் மற்றொரு அதிரடி

தெஹ்ரான், ஜூலை 13
ஈரானில் கொரோனா பரவல் அதிகமாகி வருவதைத் தொடர்ந்து, அங்கு திருமணம் போன்ற பெரும் நிகழ்வுகளுக்குத் தடை விதிப்பதாக ஜனாதிபதி ஹசன் ரவ்ஹானி தெரிவித்துள்ளார். ஈரானில் இதுவரை 2,55,117 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். 12,635 பேர் பலியாகி உள்ளனர்.
ஈரானில் கொரோனா பரவலைத் தடுக்கும் வகையில் இந்தப் புதிய அறிவிப்பை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார்.
நாடு முழுவதும் நடக்க இருக்கும் பெரிய நிகழ்வுகளுக்குத் தடை விதிக்கிறோம். அது திருவிழாவாக இருந்தாலும் சரி, திருமணமாக இருந்தாலும் சரி, பயிலரங்கமாக இருந்தாலும் சரி. கொண்டாட்டத்திற்கு இது நேரம் அல்ல என்று அவர் தெரிவித்துள்ளார். (ரி1)



சாத்தான்குளம் தந்தை – மகன் கொலை விவகாரம்

# முறையான விசாரணை முன்னெடுக்க வேண்டும்

## ஐ.நா வலியுறுத்து



நியூயோர்க், ஜூலை 13
சாத்தான்குளத்தில் தந்தை மற்றும் மகன் ஆகியோர் மரணம் தொடர்பாக முறையான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று ஐ.நா பொதுச்செயலாளர் ஆண்டனியோ கட்டர்சின் செய்தி தொடர்பாளர், ஸ்டீபன் துஜாரிக்கி தெரிவித்துள்ளார்.
தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில், வியாபாரிகளான ஜெயராஜ், அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோர் ஊரடங்கை மீறி கடை திறந்ததாகக் கூறி பொலிஸார் அழைத்துச் சென்று தாக்கியதில் இருவரும் அடுத்தடுத்து உயிரிழந்தனர்.
நியூயார்க்கில் ஐநா தலைமை அலுவகலத்தில் செய்தியாளர்களை சந்தித்த பொதுச்செயலாளர் ஆண்டனியோ கட்டர்சின் செய்தி தொடர்பாளர் ஸ்டீபன் துஜாரிக்கிடம் சாத்தான்குளம் சம்பவம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்த ஸ்டீபன் துஜாரிக், சாத்தான்குளத்தில் தந்தை மற்றும் மகன் ஆகியோர் மரணம் தொடர்பாக முறையான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும். இது போன்ற மரணங்கள் தொடர்பாக கொள்கைப்படி முழு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றே ஐ.நா. பொதுச்செயலாளர் விரும்புகிறார் எனத் தெரிவித்துள்ளார். (ரி1)



தெலங்கானாவில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவரின் உடலை எந்தவிதமான பாதுகாப்பும் இன்றி தலையும், காலும் வெளியே தெரியுமாறு ஆட்டோவில் ஏற்றிச் சென்ற அதிர்ச்சி சம்பவம் நடந்துள்ளது. நிஜாமாபாத் அரச வைத்தியசாலையில் 50 வயது மதிக்கத்தக்க நபரொருவர் கொரோனாவால் உயிரிழந்துள்ளார். அவரது உடலை குறித்த வைத்தியசாலையில் பணிபுரியும் அவரது உறவினர் ஒருவர் அம்புலன்ஸுக்குத் தகவல் தெரிவிக்காமல், ஆட்டோவில் எடுத்துச் சென்றுள்ளார். இந்த விடயம் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ரி1)


பாராளுமன்றத் தேர்தல் 2020
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்களே..



- அரச பதவிப் போட்டிப் பரீட்சைகளுக்கு 11 பொது அறிவு நூல்களை வெளியிட்டவன்.
- பல்லாயிரம் பேருக்கு பொது அறிவு கற்பித்து பலநூறு பேர் பதவி பெற வைத்தவன்.
- சமூக சேவைகள் உத்தியோகத்தராக திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் பெரும்பணி புரிந்தவன்.

வேதநாயகம் தபேந்திரன்
(B.Com (Jaf), PGD.PDS (Jaf), M.A (Jaf)
X 9
இலங்கைத் தமிழ் அரசு க
அரச பணியாளர்களே உங்களது தபால்
வாக்குகளைச் செலுத்தி வெற்றிபெற வையுங்
யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவ நண்பர்

# மீண்டும் மின்னல் மின்னும்




புதுடெல்லி, ஜூலை 13

உலகின் அதிவேக ஓட்டப் பந்தயக் காரராகத் திகழும் உசைன் போல்ட், மீண்டும் களம் இறங்குவேன் என்று அறிவித்துள்ளார்.

உலகின் மின்னல் வேக வீரராக வலம் வந்த ஜமைக்காவின் உசைன் போல்ட் ஒலிம்பிக்கில் 8 தங்கப் பதக்கங்களும், உலக தடகளத்தில் 11 தங்கப் பதக்கங்களும் அறுவடை செய்த மகத்தான சாதனையாளர் ஆவார். 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டங்களில் அதிவேகமாக ஓடிய உலக சாதனையும் இவரது வசமே உள்ளது. ஓட்டப் பந்தயங்களில் தொடர்ந்து மூன்று ஒலிம்பிக் போட்டிகளில் தங்கத்தைத் தட்டி சென்ற ஒரே வீரரும் இவர்தான்.

வரலாற்றை மாற்றி எழுதிய போல்ட் புயல், உலகின் அதிவேக மனிதர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

11 முறை உலக சாம்பியன் பட்டம் பெற்ற போல்ட்டை அதிவேக ஓட்டத்தின் அகராதி என்றால் எவரும் மறுக்கமாட்டார்கள். 2017 ஆம் ஆண்டு உலக சம்பியன்ஷிப் போட்டிகளுக்குப் பிறகு ஓட்டத்திலிருந்து ஓய்வுபெற்ற போல்ட், சிறிது காலம் கால்பந்து விளையாட்டின் மூலம் ரசிகர்களை மகிழ்வித்தார்.

33வயதான போல்ட் அண்மையில் அளித்த ஒரு பேட்டியில் தெரிவித்துள்ளதாவது;

எனது பயிற்சியாளர் கிளைன் மில்ஸ் மீண்டும் என்னிடம் வந்து, இதைச் செய்யலாம் என்று சொன்னால், அதற்கு நான் தயார். ஏனெனில் அவர் மீது நான் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறேன். நாம் இதைச் செய்யப்போகிறோம் என்று அவர் கூறினால், அது சாத்தியமே என்பதை அறிவேன். எனவே அவர் அழைத்தால் மறுபடியும் களம் இறங்கத் தயார் - என்றார். (ரி2)



இலங்கைக் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தினால் நடத்தப்பட்ட பரீட்சையில், வடக்கு மாகாணத்திலிருந்து 8 மத்தியஸ்தர்கள் சித்திபெற்று தரம் 4 இற்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கொழும்பு பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் அமைந்துள்ள இலங்கைக் கிரிக்கெட் சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. (ரி2)




# ஆசிய கிண்ணத் தொடர் இலங்கையில்!

புதுடெல்லி, ஜூலை 13

ஏ.சி.சி. என அழைக்கப்படும் ஆசியக் கிரிக்கெட் நிறுவனம் 2020 இற்கான ஆசியக் கிண்ணத் தொடரை ஒத்திவைப்பதாக கடந்த வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. அதேநேரத்தில் ஒத்திவைக்கப்பட்ட ஆசியக் கிண்ணத் தொடரை 2021 ஜூன் மாதம் இலங்கையில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இந்த ஆண்டுப் போட்டிகளை நடத்தவிருந்த பாகிஸ்தான், அடுத்த ஆண்டுத் தொடரை நடத்தும் இலங்கையுடன் உரிமைகளை பரிமாறிக் கொண்டது. அதேநேரத்தில், 2022 ஆம் ஆண்டுக்கான ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரை நடத்துவதற்கான உரிமையினையும் பாகிஸ்தான் கிரிக்கெட் நிறுவனம் கோரியுள்ளது. 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் உள்ளிட்ட ஆறு நாடுகளை உள்ளடக்கிய இருபதுக்கு 20 ஆசியக்கிண்ண போட்டிகளை நடத்த முடியும் என நம்புவதாக ஏ.சி.சி. தனது அறிக்கையில் சுட்டிக்காட்டி யுள்ளது. (ரி2)

## தேர்தலை...

எடுக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி யின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா மீண்டும் பரவுகின்றது. அவதானமாக இருக்குமாறு எனக்கு நேற்று (நேற்றுமுன்தினம்) அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது. அதன் காரணமாகவே பாதுகாப்பான முறையில் இந்நிகழ்வில் பங்கேற்றுள்ளேன்.

'கொரோனா' வைரஸ் பரவியுள்ளதா என்பதைக் கண்டறிவதற்காக பிசிஆர் பரிசோதனைகளை அதிகரிக்குமாறு ஆரம்பத்திலேயே நான் வலியுறுத்தி இருந்தேன். அவ்வாறு செய்திருந்தால் இன்று இந்நிலைமை ஏற்பட்டிருக்காது. ஓரளவேனும் நிலைமையை கட்டுப்படுத்தியிருக்கலாம்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதான தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று பஸில் ராஜபக்ச அறிவித்துள்ளார்.

'கொரோனா' முதலாவது தாக்கத்தின்போது, அதனை கட்டுப்படுத்துவதற்காக ஜனாதிபதி நாட்டை முடக்கினார். அதற்கு நானும் ஒழு ஆதரவு வழங்கினேன். இதனால் என்னை 'டீல்' காரர் என்றுகூட சிலர் விமர்சித்தனர். அப்போதுகூட பரிசோதனையை அதிகரிக்குமாறேநான்கோரிக்கைமுன்வைத்திருந்தேன். அதனை செய்யாமல், தேர்தலை இலக்காகக்கொண்டு அரசியல் இலாபம் தேடும் நோக்கில் 5 ஆயிரம் ரூபா பங்கிடப்பட்டது. அவசரமாக தேர்தலை நடத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவுக்கும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன.

உண்மை நிலைமை என்னவென்று சுகாதார சேவைகள் பணிப்பாளரும் கூறுவதில்லை. உலக சுகாதார நிறுவனத்தின் கொழும்பு கிளையும் உரிய தகவல்களை வெளியிடுவதில்லை. முதலாம் கொரோனாவில் இருந்து மீள்வதற்கே எமக்கு 6 ஆயிரம் மில்லியன் டொலர் தேவைப்படுகின்றது. இந்நிலையில் 2ஆவது அலை ஏற்பட்டால் இத்தொகை இரட்டிப்பாகும்.

எனவே, தேர்தலை ஒத்திவைப்பதாக இருந்தால், இறுதிநேரம்வரை காத்திருக்காமல், தேர்தல் ஆணைக்குழுவுடன் பேச்சு நடத்தின் உடடியாக முடிவொன்றை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு இல்லாவிட்டால் வீண் செலவுகளே அதிகரிக்கும், என்றார். (ஒ.5,44)

## இழுத்து...

அமைச்சு அறிவித்துள்ளது. ஆனாலும், தபால் வாக்களிப்பு நிலையங்களாக பயன்படுத்தப்படும் பாடசாலைகள் உரிய தினங்களில் திறக்கப்பட்டு தபால் வாக்களிக்கும் கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றுவது அதிபர்களின் பொறுப்பாகும் என்று கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சமகால கொவிட்-19 பரவல் தொடர்பாக கல்வி அமைச்சு தீவிர கவனம் செலுத்துவோடு நிலவரத்தையும் சமூக ஊடகங்களில் வெளியாகும் உண்மையற்ற செய்திகளையும் அடிப்படையாகக் கொண்டு பெற்றோர், மாணவர்கள் போலவே ஆசிரியர் மற்றும் அதிபர்கள் ஒரு வித சந்தேகத்திலும் பயத்திலும் இருப்பது அவதானிக்கப்பட்டு உள்ளது. பிள்ளைகளின் பாதுகாப்பைக் கருதி பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் போது குழப்பமற்ற தெளிவான மனநிலையில் செயற்படவேண்டும் என்பதால், அத்தகு நிலைமையை உருவாக்கித் தருதல் கல்வி அமைச்சின் கடப்பாடாகும். அதற்கமைய, சுகாதார மற்றும் பாதுகாப்பு தரப்பின் ஆலோசனைகளை கவனத்திற்கு கொண்டு பாடசாலை புலத்தில் ஏற்படக்கூடிய இடர் நிலைமையை அவதானிக்க வேண்டி ஒரு வார அதாவது இன்று ஜூலை 13 திங்கள் தொடக்கம் 17 வெள்ளி வரை நாட்டின் அனைத்து பாடசாலைகளுக்கும் பிரிவேனாக்களுக்கும் விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்தை அனைத்து தனியார் பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள் மற்றும் அனுசரணை வகுப்புகள் என்பன கடைபிடிக்கும் என்று கல்வி அமைச்சு எதிர்பார்க்கின்றது, என்றுள்ளது. (ஒ.5)

## பம்பைமடு...

தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வு கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பீ.சி.ஆர். பரிசோதனைகள் முடிவுகள் வெளியாகிய நிலையில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா பம்மைமடு தனிமைப்படுத்தல் முகாமைச் சேர்ந்த 32 பேருக்கும் வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவை சேர்ந்த 55 பேருக்கும் என்று மொத்தமாக 87 பேருக்கு பீ.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் வவுனியா பம்மைமடு தனிமைப்படுத்தல் முகாமைச் சேர்ந்த இருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது என்பதை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (ஒ.5,18)

## கொரோனா...

கூடிய நிலைமை காணப்படுகின்றது. மக்கள் இது தொடர்பில் விழிப்பாக இருக்கவேண்டும். சமூக இடைவெளியைப் பின்பற்றாத காரணத்தால் இதன் தாக்கம் ஏற்படக்கூடும். பொதுமக்கள் ஒன்று கூடுதல், தேவையற்ற பிரயாணங்களை தவிர்க்க வேண்டும்.

பொது மக்கள் முகக் கவசங்களை கட்டாயமாக அணியவேண்டும். சமூக இடைவெளியைப் பின்பற்ற வேண்டும், என்றார். (ஒ.5,20)

## தபால்...

நாடாளுமன்றத் தேர்தல் ஓகஸ்ட் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதற்கான தபால்மூல வாக்களிப்பு இன்று ஆரம்பமாகவுள்ளது. 7 நாள்கள் தபால் மூல வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் சுகாதாரத்துறையினர் தபால்மூலம் வாக்களிக்கவுள்ளனர். தொடர்ந்து 14, 15, 16, 17 ஆம் திகதிகளிலும் 20, 21 ஆம் திகதிகளிலும் தபால் மூல வாக்களிப்பு தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் இன்றைய தினம், யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் நிலையத்திலும், கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் நிலையத்திலும், மாவட்டத்திலுள்ள மூன்று சுகாதார மருத்துவ அதிகாரிகள் அலுவலகத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்திலும், மன்னாரில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையிலும், வவுனியா மாவட்டத்தில் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் மாவட்ட மருத்துவமனையிலும் வாக்களிப்புக்கள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை நாடு முழுவதும் தபால் மூலம் வாக்களிக்க 7 லட்சத்து 4 ஆயிரத்து 85 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5,110)

## விஷவாயு...

வவுனியா, ஓமந்தை, சேமமடு பகுதியில் உள்ள காணியில் பல மாதங்களாக குவிக்கப்பட்டிருந்த மாட்டுச் சாணத்தைப் பாரவூர்தி ஒன்றில் சிலர் ஏற்றியுள்ளனர். சாணத்தை ஏற்றிய இளைஞன் இளைப்பாறுவதற்காக சாணிக் கும்பத்தின் மேல் இருந்துள்ளார்.

மாட்டுக் கழிவில் இருந்து தாக்கிய விஷவாயு காரணமாக மூச்சு திணறல் ஏற்பட்ட நிலையில் ஓமந்தை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். அவசர சிகிச்சையளிக்கப்பட்டு நோயாளர் காவு வண்டி மூலம் மேலதிக சிகிச்சைக்காக இளைஞன் வவுனியா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதும் அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுவதற்கு முன்னரே உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகள முன்னெடுத்துள்ளனர். (ஒ,எ,18)

## விபத்தில்...

முல்லைத்தீவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற வாகனம், வவுனியாவில் அமைந்துள்ள வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்துக்கு முன்பாகச் சென்று கொண்டிருந்த போது கட்டுப்பாட்டை இழந்து அதே திசையில் துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்தவருடன் மோதி வீதிக் கரையில் இருந்த உயர் அழுத்த மின்சார தூணுடனும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் உயர் அழுத்த மின்சாரத் தூண் முழுமையாகச் சேதமடைந்த நிலையில் வாகனத்தின் மீது சரிந்து விழுந்தது. எனினும் உடனடியாக விரைந்து வந்த மின்சார சபை ஊழியர்கள் மற்றும் பொலிஸாரின் செயற்பாட்டால் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டிருந்தது.

இவ்விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த ரட்ணசிங்கம் (வயது-59) என்ற முதியவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் விபத்து பிரிவில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். சிகிச்சை பயனின்றி அவர் நேற்று உயிரிழந்துள்ளார். (ஒ,5,110)

## உரும்பிராய்...

ள்ளார்.

குரும்பசிட்டி வசாவிளானைச் சேர்ந்த அனோஜன் கஜேந்தினி (வயது-18) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார். குடும்பப் பெண் துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்தபோது பின்னால் வந்த 'பட்டா' ரக வாகனம் அவரை இடித்து தள்ளியுள்ளது. வாகனத்தின் சில்லினுள் நசியுண்டு அவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பட்டா ரக வாகனத்தின் சாரதி உள்ளிட்ட இருவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஒ,5,26)

## நிலைமையை...

லையா? என்பதை அப்போதைய நிலைமையைப் பொறுத்தே முடிவு எடுக்கப்படும். இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு திட்டமிட்டவாறு இன்று ஆரம்பமாகின்றது.

இந்தநிலையில், தற்போதைய கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரிக்குமா? இல்லையா? அல்லது ஓகஸ்ட் 5ஆம் திகதி திட்டமிட்டவாறு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுமா? ஆகிய கேள்விகளுக்கான பதில்களை என்னால் இப்போது உறுதிப்படக் கூற முடியாது. ஏனெனில், நான் சோதிடம் பார்க்கும் நபர் அல்லன்.

தேர்தல்கள் ஆணைக்குழுவைப் பொறுத்தவரை திட்டமிட்ட திகதிகளில் அதற்குரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

வாக்காளர்களினதும் எங்களினதும் பாதுகாப்புக் கருதி சுகாதார வழிகாட்டல்களுக்கு அதி முக்கியத்துவம் வழங்கி எமது பணிகளை முன்னெடுக்கின்றோம், என்றார். (ஒ,5,22)

## ராஜாங்கனை...

ளிப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியின் தபால் வாக்களிப்புக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை தெரிவித்துள்ளது. அந்தப் பகுதியில் கொரோனா தொற்று பரவல் நெருக்கடி காணப்படுகின்ற நிலையில் இந்த திடீர் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

## பல்கலை...

ரணங்களுடன் பல்கலைக்கழக மாணவர்கள் உள்பட 5 பேர் நேற்றுமுன்தினம் இரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஒ,5)

## வடக்கில்...

வர்கள், வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று வந்தவர்கள், இந்தியாவிலிருந்து நாடு திரும்பியவர்கள் என்று 28 பேர் வடக்கு மாகாணத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்துக்குச் சென்று வந்த 9 பேர் விடத்தற்பளை தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் 4ஆம் திகதியே கந்தக்காடு சென்று வந்தமையால், 10 நாள்களின் பின்னர் நாளை செவ்வாய்க் கிழமை பி.சி.ஆர். சோதனை அவர்களுக்கு முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தியாவிலிருந்து கடல் வழியாக சட்டவிரோதமாக நாடு திரும்பியவர் கொர்ரோனா அறிகுறியுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தாலும் அவருக்கு தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து நெடுந்தீவுக்கு கடந்த 3ஆம் திகதி வந்து சேர்ந்தவருக்கு நேற்று இரண்டாவது தடவையாக பி.சி.ஆர். சோதனை முன்னெடுக்கப்பட்டது. அவருக்கும் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ,5)

## 3 பேர்...

வெட்ட முற்பட்டபோது அது வெடித்துச் சிதறியதில் 3 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் காயமடைந்த மூவர் உள்ளிட்ட நான்கு பேர் இளவாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்தப் பகுதியிலுள்ள காணி ஒன்றிலிருந்து வெடி பொருளை எடுத்து வந்துள்ளனர். அதனை கழுவி துப்புரவு செய்த பின்னர் வெட்ட முற்பட்டபோதே அது வெடித்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்று பி.ப. 3.30 மணியளவில் நடைபெற்றுள்ளது. பொலிஸார் உடனடியாகவே சம்பவ இடத்துக்குச் சென்றனர். வெடிபொருளை எடுத்து வந்ததாகக் கூறப்படும் 4 பேர் சந்தேகத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஒ,5,26,25)

## வவுனியாவில்...

தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அவரது வீட்டைச் சூழவுள்ள 4 குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

கந்தகாடு இராணுவ முகாமில் சாரதியாக பணியாற்றும் வவுனியா மடுகந்தை பகுதியைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் விடுமுறையில் வீட்டுக்கு வந்து கடந்த வெள்ளிக்கிழமை இராணுவ முகாமுக்குத் திரும்பிச் சென்றுள்ளார். அவருக்கு பி.சி.ஆர். சோதனை முன்னெடுக்கப்பட்டது. பரிசோதனை முடிவில் கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து வவுனியாவிலுள்ள அவரது மனைவி, மகள், தாயார் என்று 4 பேர் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அவரது வீட்டைச் சூழவுள்ள 4 குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. (ஒ,5,110)

## வாள்வெட்டு...

றான நடவடிக்கையில் ஈடுபட்டால் தகுந்த தண்டனை வழங்கப்படும் என்று கூறி எச்சரிக்கை சுவரொட்டி யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளன. அதில், கடந்த சில வருடங்களாக எமது மண்ணில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, அடாவடித்தனம், வாள்வெட்டு மற்றும் பெண்கள் மீதான வன்முறைகள் என்பன தலைதூக்கி உள்ளன. இவை அனைத்துக்கும் எமது இனத்தில் பிறந்த சிலரும் அவர்களுக்கு உடந்தையாக அரச உயர் மட்டத்தில் உள்ளவர்கள் துணை போயுள்ளனர்.

நாம் அதனை பொறுமையாக சகித்து வந்தோம். ஆனால் இந்தச் செயற்பாடுகள் எமது தமிழ் மண்ணில் நடைபெற இனிமேல் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. இனிவரும் காலங்களில் எமது இனத்தின் வாழ்வியல் பண்பாடு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கு எதிராக செயற்படுவோர் தகுந்த தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள். எமது இந்த செயற்பாடானது எமது தமிழ் மக்களின் சுதந்திரமான மற்றும் நிம்மதியான வாழ்வியல் அமையும் வரை தொடரும், என குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ,5,25)



# தனது கூற்றுக்கு தேவாரங்களில் சான்றுகள் உள்ளதாம்!

## கதைவிடுகிறார் மேதானந்த தேரர்



கொழும்பு, ஜூலை 13

**திருக்கோணஸ்வரம், நல்லூர் தொடர்பான எந்தவொரு வரலாற்றையும் தான் திரிபுபடுத்தவில்லை என்பதற்கு தேவார பதிகங்களே சான்று என்று கிழக்கு தொல்பொருள் செயலணியின் உறுப்பினர் எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.**

இலங்கையை இராவணன் ஆண்டதாக கூறுவது கட்டுக்கதை என்றும், வடக்கு கிழக்கு தமிழர்களின் பூர்வீகம் அல்ல என்றும், குறிப்பிட்டு சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்த எல்லாவெல மேதானந்த தேரர், திருக்கோணேஸ்வரம் ஆலயம் கோகண்ண விகாரை எனவும், நல்லூர் முருகன் ஆலயம் சபுமல் குமார என்ற சிங்கள இளவரசனால் கட்டப்பட்டது என்றும் கூறியிருந்தார். இதற்கு தமிழர்கள் மற்றும் இந்து அமைப்புக்களிடத்திலிருந்து கண்டனங்கள் வெளியிடப்பட்டு வரும் நிலையில், எல்லாவெல மேதானந்த தேரர் அதற்குப் பதிலளித்துள்ளார். 'திருக்கோணேஸ்வரம், நல்லூர் உள்ளிட்டவை தொடர்பாக நான் கூறிய கருத்துக்களை மீளப்பெற முடியாது. நான் வரலாற்றை திரிபுபடுத்தவில்லை. தேவார பதிகங்களில் அதற்கான சான்றுகள் உள்ளன. தற்போது அவற்றை அழித்திருப்பார்களோ தெரியாது. ஆனால் என்னால் தெரிவிக்கப்பட்டவையே வரலாற்று உண்மையாகும். அதற்காக நாம் கோணேச்சர, நல்லூர் ஆலயங்களை இடித்துவிட்டு மீண்டும் விகாரைகளை கட்டுவதென்று பொருள்படாது. இவ்வாறான வரலாற்றுத் தலங்களை நாம் பாதுகாக்க வேண்டும்- என்றார். (ஓ,5)



## வேட்பாளரின் வாகனம் மாட்டுடன் மோதி விபத்து

### நால்வர் காயம்

மன்னார், ஜூலை 13

நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் பயணித்த வானகம் மாட்டுடன் மோதிய தில், நால்வர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று இரவு பரந்தன் வீதி புளியம்பொக்கணைச் சந்தியருகில் இடம்பெற்றுள்ளது.

வன்னித் தேர்தல் மாவட்டத்தில், சுயேட்சைக் குழு 19இல் போட்டியிடும் வேட்பாளரான சுபாஸ் சிங்கம் பயணித்த வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது. தேர்தல் பரப்புரைக்காகச் சென்ற போது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. மாடுகள் வீதியின் குறுக்கே வந்ததால் விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. விபத்தில் வாகனமும் பலத்த சேதம் அடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது (ப-213)

## அதிகாரப்பகிர்வை ஒழித்தால் வடக்கில் மோதல் வெடிக்கும்!

கொழும்பு, ஜூலை 13

13 ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமானால் வடக்கு, கிழக்கில் மீண்டும் பிரச்சினை உருவாகக்கூடும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான முன்னாள் அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடரபில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கையில்வாழும்சிறுபான்மையின மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே 1987ஆம் ஆண்டு இந்தியாவின் தலையீட்டுடன் 13ஆவது திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்மூலம் அதிகாரங்கள் பகிரப்பட்டன.



ஆனால், இச்சட்டம் நீக்கப்படும் என ஆளுங்கட்சியினர் கூறுகின்றனர். 13ஆவது திருத்தச்சட்டத்தை நீக்கினால் நிச்சயம் வடக்கு, கிழக்கில் பிரச்சினை உருவாகலாம். எனவே, எக்காரணம் கொண்டும் 13 நீக்கப்படக்கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும்.

சிறுபான்மையின பிரதிநிதித்துவம் உட்பட சிறுபான்மையின மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய இடமாக மாகாணசபை இருக்கின்றது. இந்தநிலையில் அதனையும் நீக்குவதற்கு இடமளிக்கமுடியாது. 13 ஐயும், 19 ஐயும் நீக்கிவிட்டு நாட்டில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கின்றனர். எனவே, மொட்டுக் கட்சிக்கு வாக்களிக்கக்கூடாது- என்றார். (ப-44)

## வட்டு,கோப்பாயில் கொள்ளை, திருட்டு

கொடிகாமம், ஜூலை 13.

வட்டுக்கோட்டை, கோப்பாய் பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில், நேற்று கொள்ளை, திருட்டுச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று அந்தந்தப் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீதியால் சென்ற பெண் ஒருவரிடம் ஒன்றரைப் பவுண் சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது என்றும், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீட்டின் உரிமையாளர்கள் திருமண வீட்டுக்குச் சென்ற நிலையில், வீட்டிலிருந்த 8ஆயிரம் ரூபா பணமும், தங்கக் காப்பும் (வளையல்) திருடப்பட்டுள்ளது என முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் இரண்டு பிரிவுப் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ப-159)

# பொதுத்தேர்தல் தொடர்பில் இருவேறு நிலைப்பாடுகள்!

கொழும்பு, ஜூலை 13

நாட்டில் கொரோனா வைரஸின் தாக்கம் மீண்டும் ஆரம்பித்துள்ள நிலையில் ஏற்கனவே ஓகஸ்ட் மாதம் 05ஆம் திகதி நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் அரசு, எதிரணிகள் இருவேறு நிலைப்பாடுகளில் உள்ளன.

கொரோனாவின் பாதிப்பு நாளுக்கு நாள் தொடர்ந்து அதிகரித்தால் குறித்த தினத்தில் பொதுத்தேர்தலை நடத்துவதா? இல்லையா? என்பதை தேர்தல்கள் ஆணைக் குழுவே தீர்மானிக்க வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர். பிரதான பரப்புரைக் கூட்டங்களில் மக்கள் அதிகளவில் கலந்துகொள்வார்கள் என்பதால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதான பரப்புரைக் கூட்டங்களைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளோம் என்று அக்கட்சியின் தலைவரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார். சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி வேட்பாளர்களின் சிறு பரப்புரைக் கூட்டங்கள் இடம்பெற எமது கட்சி அனுமதி வழங்கியுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார். இதே வேளை, நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கம் மீண்டும் உருவெடுக்க ராஜபக்ஸ அரசே முழுப்பொறுப்பு என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் தெரிவித்தனர். மக்களின் சுகாதாரப் பாதுகாப்பில் கவனம் செலுத்தாமல் கொரோனாவின் தாக்கத்துக்குள் பொதுத்தேர்தலை நடத்தி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் எண்ணத்துடனேயே ஊரடங்கால் முடக்கப்பட்டிருந்த நாட்டை அரசு திறந்துவிட்டது எனவும் அவர்கள் குற்றம்சாட்டினர். தற்போதைய நிலைமையில் பாதுகாப்பான முறையில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது கேள்விக்குறியே எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். எனவே, இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு தாமதிக்காமல் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ப-22)

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1984 இல் பிறந்த அவிட்ட நட்சத்திரம் உடைய (பார்வை அற்றவர்) மணமகனுக்கு மணமகள் தேவை.

021 221 5591



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.